ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்று — ஆண்டாள்

தொகுதி ௩௧	கர ஹூ சித்திரை மீ	பகுதி ௪

பிரார்த்தனை

ஸ்ரீராமகிருஷ்ண நாமாமிருதம்

(57-பக்கத் தொடர்ச்சி)

முத்தி நெறிகளாம் பக்தியும் ஞானமும்
கருமமும் யோகமும் சரிசமம் என்றனை.
நிகழ்தற் கரியன நிகழ்த்தினை நெடியோய்.
இகத்தினில் இனியதெவ் வுகத்தினில் இயற்றினர்!
மண்ணவர் உணர்வது திண்ணம் பின்னாள்.
பிரம்ம நிர்க்குண, மருவினை உடலம்.
உலகம் தோன்றலும் ஒழிதலும் நிலைத்தலும்
இலகுநின் இச்சையால் என்பேன் அடியேன்.
நின்பெரு மையினை என்னென் றியம்புகேன்!
ஆரணம் அறியா மகிமைய, எவர்க்குனைச்
சேரலும் அப்பாற் செல்லலும் இயலும்?
நின்னரு ளாலெனை நின்மல உய்வி.
உவப்பால் யானிங் குய்ந்திட அருளுக,
பவப்பிணி தீர்க்கும் பாதைவே றறியேன்.

(தொடரும்)

உயர்ந்தோர் கூறும் உறுதி மொழிகள்

உடலும் மனமும்

உடலே தருமவாழ்க்கைக்கு முதற் சாதனமாகும்; அதன் துணையின்றிப் பொருளோ இன்பமோ, அறமோ வீடோ, பெறுதல் அரிதாகும். சுவரை வைத்தன்றோ சித்திரம் எழுதவேண்டும் எனும் பழமொழி பொருள் பொதிந்ததேயாகும். 'உடலை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்றார் திருமூலர். இவ்வாறு பேசுவதற்கெல்லாம் காரணம், உடலும் மனமும் ஒன்றோடொன்று தொடர்புற்றிருப்பதே (சம்பந்தப்பட்டிருப்பதே) யாகும். உடல் மனத்தையும் அடக்கும்; மனமும் உடலை யடக்கும். நல்ல மனம் பெற வேண்டின் நல்ல உடல் வேண்டும் என்ற பழமொழி ஆங்கிலேயர்க்குள்ளும் உள்ளது. யோக நூல்கள் மனதை அடக்கும் பயிற்சிகளை விதிக்குமுன், உடற் பயிற்சிக்குரிய சாதனங்களை விதிக்கின்றன. உடலை அடக்குதலைப் போல மனதை அடக்குதல் அவ்வளவு எளிதல்ல; ஆதலின் உடலை முதலில் அடக்கி நமக்கு அதைத் துணையாகக் கொண்டுதான், மனதை அடக்க முயலுதல் நன்று.

முதன் முதலாக, உடல் மனத்தை எவ்வாறு தன் சக்திக்கு உள்ளாக்குகிறது என்பதை உதாரணங்கள் மூலமாக அறிவோம். உடல் வலிவுள்ளதாகி நலமுற்று நோயற்றதாக விளங்கும் போது, மனமும் அமைதியாகி நல்ல நிலையில் இருக்கின்றது. உடலிற் பலவீனமும் பிணியும் அமைந்துள்ளபோது, மனிதன் பலவித அல்லல்கட்கு உள்ளாகிறான், அவனது மனம் துன்பத்திற்கும் கவலைகட்கும் உள்ளாகிறது. உடலில் கூரிய வலி உள்ளபோது மனம் அதை நோக்கிப் பலாத்காரமாக இழுக்கப்படுகிறது; வேறு விஷயங்களைப் பற்றிய சிந்தனைக்கு இடங்கொடுப்பதில்லை. உடலில் பித்தத்தால் தலை சுழலும் போது மனம் மயக்கமடைகிறது. வெறி தரும் பானங்களைக் குடிப்பதினால் மனம் ஊக்கமுதிர்ந்து சுறு சுறுப்பாக வேலை செய்கின்றது. உணவின்றிப் பட்டினியாயிருப்பதால் உடற் சோர்வோடு மனத்தளர்ச்சியும் ஏற்படுகின்றது; அறிவு முன் போல் திறமையோடு தொழில் செய்யும் பண்பை இழந்து விடுகின்றது. வேதத்தை நன்கு அத்தியயனம் செய்திருந்த ஒரு மாணவனைக் குரு சில நாள் பட்டினிகிடக்குமாறு கட்டளையிட்டார். பட்டினி கிடந்தபின் கற்றிருந்த வேதங்களிற் சில பாகங்களை ஒப்பிக்கச் சொன்னார். அவனுக்கு அது சிரமமிகுந்ததாயிற்று. இன்னும் சிலநாட் பட்டினி கிடந்தபின் சில பாகங்களை அவன் மறக்கலானான். பின்னும் பட்டினியை அதிகரிக்கச் செய்ய, அவன் முற்றும் மறந்தவனானான். அந்நிலையில் குரு மறுபடியும் சிறிது சிறிதாக அவனை உண்ணும்படிக் கட்டளையிட, நாளாக நாளாக மறந்த பகுதிகள் நினைவிற்கு வரலாயின; வழக்கம்போல் உண்டு களைப்பும் இளைப்பும் நீங்கியபின் மாணவன் வேத அத்யயனத்தை முன் போற் செய்யும் திறமையை மறுபடியும் பெற்றான். இந்த உபநிடதக் கதையால் உணவுக்கும் ஞாபகசக்திக்கும் உள்ள சம்பந்தம் விளங்குகிறது. பசிவருங்காலத்து, கல்வியும் அறிவுடைமையும் தவமுயற்சியும் தாளாண்மையும் பறந்து விடுகின்றன. வறுமையாலும் பிணியாலும் வருந்தும் போது அடியார்களும் இறைவன்மீது கோபங்கொண்டு திட்ட ஆரம்பித்து விடுகின்றனர்; அவை இரண்டும் நீங்கும்போது இறைவன்மீது பெரு நம்பிக்கையையும் பேரன்பையும் பூணுகின்றனர். மலச் சிக்கலினால் நரம்புமண்டலம் பாதிக்கப்பட, அதனால் மனத்தளர்ச்சியும் மூளையின் பலவீனமும் ஏற்படுவதை மருத்துவர்கள் நன்கறிவார்; ஆதலின் நோயாளிக்கு அம் மலச்சிக்கலை நீக்க மருந்தளித்து, உற்சாகத்தையும் தெளிவையும் எளிதாக மீளச் செய்வர். விடஞ் செறிகின்ற காலத்துப் பேரடியார்களும் பன்முறை மயங்கி வீழ்வர், உயிரையும் இழப்பர்.

இன்னும், நமது உடலிலே 'உண்முகச் சுரப்பிகள்' என்னும் பெயர்பெற்ற சில உறுப்புகள் உள்ளன. அவ்வுறுப்புகள் இரத்தத்தினின்றும் சில நீர்களைத் தயாரித்து, அவற்றைக் குழாய்கள் வழியாக வெளியே செலுத்தாமல், நேரே இரத்தத்திற்குள்ளே செலுத்துகின்றன, இவை சுரக்கும் நீர்கள் இரத்தத்திற் புகும்போது, அவை நரம்பு மண்டலத்தைப் பலமாகப் பாதிக்கின்றன; அம்மூலமாக உடலின் வளர்ச்சி தேய்வு முதலிய முக்கிய தொழில்களைக் கட்டுப்படுத்துகின்றன. உண் முகச் சுரப்பிகளிற் சில வேலை செய்யாதபோது, மனச் சோர்வும், மயக்கமும், கை கால்களின் கோடிகளில் குளிர்ச்சியும், சில இடங்களிலிருந்து இரத்தம் பெருகுதலும் பிறவும் ஏற்படுகின்றன என்பதை மருத்துவர்கள் ஆராய்ச்சியால் நிலை நாட்டியுள்ளனர்.

உடல் மனதைப் பாதிப்பது போலவே, மனமும் உடலைப் பாதிக்கின்றது. உள்ளத்

திலே ஊறும் உணர்ச்சிகட்குத் தக்கவாறு, நரம்புமண்டலமும் உண்முகச் சுரப்பிகளும் தமது தொழில்களைச் சுறுசுறுப்பாகவோ மந்தமாகவோ இயற்றுகின்றன. காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாத்சரியம் என்பன உடலைச் சிதையச் செய்கின்றன. அவற்றின் தீவிரத்தன்மையால் உடல் விரைவிற் கேடடைவது மன்றி, மரணமும் நிகழ்வது உண்டு; மந்த நிலையால் உடல் மெல்ல மெல்லச் சீரழிகின்றது. ஓர் இரண வைத்தியர் தம்மிடம் கொடுக்கப்பட்ட ஒரு பிணத்தை அறுத்து உள்ளுறுப்புகளை ஆராய்ந்து கொண்டிருக்கும்போது, அதன் நெஞ்சு துடிப்பதையும் இரத்தம் சற்றே ஓடிக் கொண்டிருந்ததையும் கண்டதும், பெருந்துயரம் அடைந்தார்; அதன் பயனாக அவர் உடனே உயிரை இழந்து கீழே வீழ்ந்தார். பெருஞ் சினத்திற்கு ஒருவன் வசப்படும்போது அவனது இரத்தத்திலே ஒரு வகை விடப்பொருள் உண்டாகிப் பரவுகிறது என்றும், அதனால் உடல் பலவீனமுற்றுச் சோர்கிறது என்றும் நிபுணர் கூறுகின்றனர். அடக்கவொண்ணாச் சினத்திற்கு ஆளான ஒரு மங்கை உடனே தனது குழந்தைக்குப் பாலூட்டின சிறிது நேரத்தில் அக்குழந்தை இறந்தது என்றும் கேள்விப்பட்டுளளோம். அளவிற்கு மிஞ்சிய தீவிர சந்தோஷத்தாலும் உடலிற்கு ஆபத்து விளைகின்றது. பல ஆண்டுகளாக வயது முதிர்ந்த தாயைப் பிரிந்து போர்முனைக்குச் சென்றிருந்த ஒரு வீரன் உயிரொடு திரும்பான் என்று பலரும் உறுதியாக நினைத்திருந்தனர்; அவ்வமயம் திடீரென அவன் திரும்பிவந்தான் என்பதைக் கேட்ட தாய் ஆனந்தத்தில் மூழ்கி, அக்கணமே இறந்தாள். பலநாளாகப் பேராவலோடு ஓர் உயர்ந்த பதவியைப் பெற ஆசைப்பட்டு வந்த ஓர் அறிஞர்க்கு எதிர்பாராத வகையில் திடீரென அப்பதவி கிட்டியதென வந்த செய்தியை வாசித்து அறிந்ததும், தானாக ஆனந்தம் பொங்க, அவர் சுரத்திற்கு ஆளானார். தாம் எழுதிய சோக நாடகத்திற்குப் பரிசு வழங்கியதைப் பற்றிக் கேள்வியுற்ற ஒரு கவிஞர் ஆனந்த மிகுதியால் செத்து வீழ்ந்தார். ஒரு பெண் மணி, இறந்து போன தனது சிற்றப்பரின் தலையணையடியிலே நூற்றுக்கணக்கான தங்க நாணயங்களைக் கொண்ட ஒரு பையைக் கண்டதும், ஆச்சரியக் கடலில் மூழ்கி உயிரையும் விட்டாள்.

உள்ளத்திலே ஊறும் உணர்ச்சிகள் தீவிரமாயிராது மந்த நிலையிலே உள்ளபோதும், அவை நோயை உண்டுபண்ணுகின்றன. மனக் கவலையாலும், தவறு செய்ததைக் குறித்து வருத்த முறுவதாலும் தலைவலியும், இரத்தப் பையில் தொந்தரவுகளும் பலவகை வலிகளும் உண்டாகின்றன. சிதை இறந்தவரை எரிக்கும், ஆனால் சிந்தையோ (கவலையோ) உயிரோடிருப்பவரை எரிக்கும் என்பது பழமொழி. கவலையின்றியும் மன அமைதியோடும் சற்றே அகமகிழ்ச்சியோடும் நண்பரோடு அளவளாவிக் கொண்டு உண்ணுங்கால், சோறு சமித்தற்கு வேண்டிய நீர்கள் ஒழுங்காகச் சுரக்க, உணவு ஜீரணிக்கப்பட்டு உடம்போடு செவ்வையாக ஒன்றுகிறது. மன அருவருப்போடும் பொங்கும் பகைமையோடும் உண்ணும்போது, உணவில் ருசியின்மை தோன்ற, அது உடலில் ஒட்டாது போகிறது.

பயத்தால் ஒரு மனிதனுக்குப் பலவித கோளாறுகள் உடலில்வற்படுகின்றன. மிக்க பயத்தால் ஓரிரவிலே தலை நரைத்தவர்களும் உளர் என்பர்; பாம்பைப் பக்கத்தே கண்ட பயத்தால் கைகால்களை அசைக்கும் திறனை இழந்து, இருந்த இடத்திலே நின்றவர்களும் உளர். எங்கும் வாந்திபேதி நிகழும் காலத்தில், சிறிது உணவு உண்டாலும சரியாது போகுமோ என்ற பயத்தால் வாந்திபேதிக்கு ஆளாவார் சிலர். ஒரு வியாபாரி ஒரு தோழரை அழைத்துக் கொண்டு உல்லாச யாத்திரை சென்று திரும்பும் வழியில் திடீரென ஒரு புயற்காற்று வீசத் தொடங்கிற்று. அதனால் தோழரை அபாயமின்றி வீடுசேர்க்க இயலாதோ என்ற பயம் உண்டாயிற்று. அன்றியும், தமது மதிப்பை இழக்க வேண்டி வருமே, துயரத்திற்கும் ஆளாக நேருமே என்றும் பெரிதும் அஞ்சினர். அவர் இல்லத்திற்கு மீண்டதும், அவர்க்குக் கை கால்களில் திமிர்வாயு என்னும் நோய் (பக்கவாதம்) திடீரென உண்டாக, அவர் தாம் வந்த புகை ரதத்தினின்றும் கீழிறங்க இயலாதவரானார். வைத்தியர்கள் எவ்வளவு சிகிச்சை செய்தும் பயன்படாதொழிந்தது; பின்னர் பிரார்த்தனையாலும் ஞான சாதனங்களாலும் அது நீங்கிற்று. பலவகையான அச்சங்களும், குற்றத்திற்கு ஆளாகிவிட்டதான உணர்ச்சியும் மனதில் இருந்தவரை நோய் தீராமல், அவை நீங்கவும் நோயும் மறைந்தது.

இன்னொருவர் காதுவலியால் நோவுபட்டுக் கொண்டிருந்தாராக, அதைத் தீர்க்கப் பல செவிநோய் நிபுணர்கள் தாம் அறிந்தவரை பல சிகிச்சை முறைகளைக் கையாண்டனர்; முயற்சி வீணாயிற்று. அந்நோய்

நிபுணர்க்குள் ஒரு முதிர்ந்த அனுபவமுடையார் பின்னர் இவ் உண்மையைக் கண்டறிந்து கூறினர்; ஒரு மனிதனுடைய உணர்ச்சிகள் சீர்குலைந்து, ஆசை நிறைவேறாது அதிருப்தி மிகும் சமயத்தில் சில சுரப்பிகளும் இரத்த ஓட்டக் கருவிகளும் ஒழுங்காக வேலை செய்யாமையால் அம்மாதிரியான காதுக்குத்து நோய் உண்டாகிறது என்பது அவரது முடிவு, அவனது மனத்திலுள்ள ஆசை நிறைவேறித் திருப்தி பெறும் போது தான் அந்நோய் நீங்கும் என்பது ஊகத்திற்குத் தோன்றுகிறது. அவனது மனது சமாதானமாயுள்ள போதும், உணர்ச்சிகள் பொங்கி மனக்கலக்கம் ஏற்படாதபோதும் அவனிடம் காதுக்குத்து தோன்றுவதில்லை என்பதும் அனுபவத்தில் அறியப் படுகின்றது. பயம், கவலை, அருவருப்பு, பொறாமை, கோபம் முதலிய உணர்ச்சிகளால் நரம்புகள் ஒழுங்காக வேலை செய்தல் தடைப்படுகிறது: அதனால் பிணிகள் உண்டாகின்றன என்பது மருத்துவர்கள் ஆராய்ச்சியாற் கண்ட உண்மை. ஒரு மனிதனது வாழ்க்கையில் உணர்ச்சிகள் சீர்குலையும்போது பல்வலி முதலான சில தொந்தரைகள் உண்டாகின்றன என்பது மருத்துவர்களின் அனுபவம். இம்மாதிரிப் பிணிகட்கு ஞானவாழ்விற்குரிய முயற்சியும் மனச் சாந்தமும் தக்க மருந்துகளாகின்றன.

உள்ளத்து ஊறும் ஒவ்வோர் உணர்ச்சியும் நரம்புமண்டலத்தைத் தாக்கும் சக்திவாய்ந்தது. அன்பு, அனுதாபம், பிரியம், பக்தி, ஞான இச்சை முதலியவை உடலிற்கு இதஞ்செய்யும் தன்மையன. மனைவிமீது பெருங் கோபங் கொண்ட ஒருவன் புன்சிரிப்போடு தன்னுடன் கொஞ்சவரும் தன் குழந்தையின் இனிய முகத்தைக் கண்டதும், அவனது முகத்தில் தோன்றிய சினக்குறிகள் மறைகின்றன. துயரப் பொதியைத் தாங்கமாட்டாது சுமந்து வந்து, ஒருவன் ஒரு மஹானிடம் தன் மனச் சுமையை வாயாரக்கூறி வெளியேற்றுகிறான்; அவரது முன்னிலையில் அவனது மனம் ஆறுதல் பெறுவதுமன்றி, உடலும் களைப்பொழிகின்றது. தன்னம்பிக்கையும் கடவுளிடத்து நம்பிக்கையும் நரம்புகளை உறுதிப்படுத்துகின்றன. அளவிற்கு உட்பட்ட மனமகிழ்ச்சியால் நரம்புமண்டலம் நலம்பெறுகின்றது.

முற்கூறியவற்றால் மனம் உடலை அனுகூலமாகவும் பிரதிகூலமாகவும் தாக்குகின்றது என்பதும், உடலும் மனதை அங்ஙனமே இருவழியிலும் பாதிக்கின்றது என்பதும் பெறப்படுகின்றன; இது உண்மையாயினும், ஆழ்ந்து யோசிக்கும்போது, மனம் உடலை யடக்கியாண்டு, உடலைப் பொருட்படுத்தாது மேலெழுந்து தன் இச்சைப்படி ஒழுக வல்லது என்பதே தெளிவாகின்றது. மஹான்களின் வாழ்வில் மனம் உடலைவிட்டுப் பிரிந்து வேறாக நிற்பதையும் காண்கிறோம். நீற்றறையில் இடப்பட்ட திருநாவுக்கரசர் ஆனந்தத்தில் மூழ்கியிருந்தார்; ஒரு யோகி தன் மனத்தை உடலினின்றும் (ஆமையைப் போல்) உள்ளிழுத்துக் கொள்ளும்போது, உடலிற்கு விளையும் துயரம் அவனது மனதைத் தாக்குவதில்லை. ஆக, உடலும் மனமும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருப்பினும், உடல் மனதை ஆட்டிவைப்பதற்குப் பன்மடங்கு அதிகமாக, மனம் உடலை அடக்கியாள்வது தெரியவருகின்றது.

குருதேவர் உபதேச மணிமாலை

(60-ம் பக்கத் தொடர்ச்சி)

800–கிருபையின்றி சாதனம் பயன் படாது

கொய்தரு மோமங் கூட்டிடி னுணவு
குறைவறச்சீரண மாகும்,
செய்கையி னின்ற சீரணக் கருவி
செயலறிற் பயன்படா தோமம்;
மெய்தரு தேவி திருவரு ளின்றேல்,
விவேகவி சாரணை பயிற்சி
கய்தர விருந்து செய்யினு மெதுவும்
கருதிடும் பயன்பட லின்றே. 155

(கைதர-மிகுதியாக. செயல் அறில்-(கெட்டுப் போய்த்-தொழில்) செய்யாவிடில்).

809–ஞானியும் பக்தனும்

ஞானியி னுள்ளத் தொழுகிடு மறிவாம்
நற்பகீ ரதியொரு திசைநோ்
மேனிமிர்ந் தோடு மூலகொரு கனவாய்
விளங்கிடுந் தனதக மிலயம்;
கானுறு பத்த னகத்தொழு கன்பாங்
கங்கையெப் பொழுதுமோர் படித்தன்
றூனறப் பெருகும், வடிந்திடும், பத்தன்
னுறுசெயல் பலவித மாமே. 156

(பகிரதி-கங்கை. அகம் இலயம்-மனம் ஆன்மாவில் லயமடைகிறது. ஒழுகும்-பெருகும். ஓர் படித்தன்று-ஒரே தன்மையதாயிராது. ஊனற-குறைவற)

816–சத்துவ குணமும் கருமமும்

சத்துவ குணத்தோர் கருமங்கள் செய்தல்
சகத்தவ சியமல, கருமம்
மெத்திடு மவரை விட்டிடும் வலிதில்
விடுகில னிறைவினை புரிய,
ஒத்திடு கருப்ப முற்றநன் 'மருகி'
உறுதொழில் நீக்கிடப் பெறுவள்,
கத்துறு குழந்தை பிறந்தபி னதனைக்
காப்பதற் கெனவிடப் படுவாள். 157

(சகத்து-உலகில். வலிதில்-பலவந்தமாக. மருகி-மருமகள். கத்துறு-கத்துகின்ற.)

816–கருமயோக ஸாரம்

சத்துவ குணமில் லவருல கத்துத்
தங்கரு மங்களை முறையே
நித்தனை நினைந்து நிகழ்த்திடல் வேண்டும்
நீக்கமி லூழிய ராக;
அத்தனா் நாமம் வழுத்தியுள் சிந்தித்
தாசையின் ருய்வினை செய்யின்
சித்தியார் கரும யோகசா ரமதே
திகழ்பய னதிலடங் கிடுமே. 158

(இல்லவர்-இல்லாதவர். நித்தன்-கடவுள். நிக்கமில் ஊழியர்-பிரியாத வேலைக்காரர்.)

827–பற்றற்றுக் கருமம் செய்க

எங்கணுங் கரும மியற்றிடா திருத்தல்
இயல்வதன் றியற்றலே பண்பாம்;
இங்கணெவ் வினையு மியற்றிடப் படுமா
றியற்றிடப் படுகவுட் பற்றுத்
தங்குத லின்றி யவைசெயப் பட்டால்
தற்பர னிடத்தவை யுய்க்கும்;
பொங்கிக பரத்தின் புண்ணிய பாவம்
புசிப்பினில் விருப்பொறுப் பாகா. 159

(இயல்வதன்று-முடியாது. பண்பு-சுபாவம். தற்பரன்-பகவான். உய்க்கும்-செலுத்தும். ஒறுப்பு-வெறுப்பு.)

828–கருமம் முடிவன்று மார்க்கமே

வினைசெயல் வாழ்வின் முடிபய னன்று
விதித்ததோர் மார்க்கமே யாகும்;
முனிவனைச் சேர்க்கும் வாழ்க்கையின் முடிபில்,
முதுநெறி முடிபென மருளேல்;
புனைதரு மூர்க்குப் புகுநெறி யூராய்ப்
பொருந்துவ தில்லென நினைக;
வனைதரு கரும நோக்கமன் ருகும்;
மாண்புறு பத்திவேண் டிடுவாய். 160

(முடிபயன்-முடிவான பலன். முனைவன்-கடவுள். நெறி-மார்க்கம். முடிபு-முடிவு. மருளேல்-மயங்காதே. இல்-இல்லை)

ஒரு சாதகர்க்கு அருளிய போதனை

ஸ்ரீமத் சுவாமி சிவானந்தர்

[ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் இரண்டாவது தலைவரான ஸ்ரீமத் சுவாமி சிவாநந்தரை (மஹாபுருஷஜீ மஹாராஜை)த் துறவிகள் மட்டுமல்ல, சாதனம்பழகும் இல்லறத்தார் பலரும் நாடி உபதேசம் பெற்றுச் செல்வதுண்டு. அவரது மன உருக்கமும், தூய அன்பும் மன்னுயிர்மீது அவர் கொண்ட இரக்கமும் பலரையும் அவர்பால் இழுக்கலாயின. மெய்யுணர்ந்த அப்பெரியார் ஒரு சமயம் அருளிய பின்வரும் பெறலரும் போதனை மொழிபெயர்த்து அளிக்கப்படுகின்றது — ஆசிரியர் ரா. வி]

ஒருநாள் பிற்பகல் சுவாமிகள் தமது அறையில்அமர்ந்திருந்தபோது, ஓர் இல்லற அன்பர் அவரை அணுகித் தம்மை இன்னர் என்று தாமே அறிமுகம் செய்துகொண்டபின் இவ்வாறு அவரிடம் கூறலானுர்: "மூன்று ஆண்டுகட்குமுன் மஹாராஜரை (சுவாமிபிரம்மாநந்தரை)ச் சந்திக்கும் பெரும் நற்பாக்கியத்தை பெற்றேன். அவர் என் மீது மிக்கஅன்பு காட்டியமையால், யான் அவரை முதன் முறை சந்தித்தபின்பு, சமயம் நேரும்போதெல்லாம் அவரைநாடி, அவரது மலரடியின் கீழமர்ந்து அவர் அருளிய உபதேசங்களைப் பின்பற்றிச் சாதனம் பழகிவரலானேன். என் உள்ளத்தில் அவரைக் குருவாக ஒப்புக்கொண்டு, ஒரு நாள் எனக்குத் தீக்ஷை அருளுமாறு அவரை வேண்டலானேன். அவரும் பேரன்போடு என்னிடம் "சரி உமக்குத் தீக்ஷை தருவேன், ஆனல் சிறிதுகாலம் பொறும். அவசரப்பட வேண்டாம். மனத்தை முதன் முதலில் தயாராக்கிக் கொள்ளவேண்டும். பின் எல்லாம் உமக்கு எளிதாகும். தற்சமயம் எனது போதனைகளைப் பின்பற்றி நடந்துகொண்டேயிரும்" என்ருர். யானும் இயன்றவரை அடிக்கடி வந்து தரிசித்துக் கொண்டிரு

தேன்; ஆனல் அந்தோ அவர் மஹா சமாதியடைந்து விட்டார். அவர் வாக்களித்தபடி எனக்கு தீக்ஷை அருளுமுன் சென்று விட்டனர். இப்போது யான் தங்களை நாடி வந்துளேன். மஹராஜர்க்குப்பின் தாங்களே அப்பதவியை வகித்திருப்பதன்றி, அவரது ஞான சக்தி தங்கள் மூலம் பெருகுகிறது என்பதையும் யான் நெஞ்சார உணர்ந்து வருகிறேன். இனி நான் மறுபடியும் ஏமாற்றம் அடையாதபடி, கருணை கூர்ந்து எனது குறையை நீக்குவீர்களாக.''

சுவாமிகள் தம் முன் இருந்த அன்பரது சிரத்தையார்ந்த முகத்தை உற்று நோக்கிப் பின்வருமாறு பதிலளிக்கலானர்.

''நீர் எவ்வளவு பாக்கியசாலி! முன்னரே நீர் மஹராஜாது கிருபையைப் பெற்றிருக்கிறீர். அவர் உமக்குப் போதித்துள்ளார்; அவருடைய மொழிகள் உயிருள்ள மொழிகள் என்பதையும், அவற்றுக்குள்ளே பெருஞ் சக்தி அமைந்திருக்கின்றது என்பதையும் உறுதியாகத் தெரிந்து கொள்ளும். அவர் கொடுத்த போதனைகளைப் பின்பற்றும் நீர் விரும்பிய இலட்சியத்தை அடைவது கட்டாயம். உமக்குத் தீக்ஷை அவசியம் என்று எனக்குத்தோன்றவில்லை; ஆனல் நீர் தாகத்தோடும மனத் துடிப்போடும் அவரை அழைப்பீராயின், நீர் அவரைக் காண்பது நிச்சயம்; அவசியமாயின் அவரே உமக்குத் தீக்ஷை அருளுவார். அவரது கருணை பெருவல்லமையுடையது. சுவாமிபிரம்மாநந்தர் ஒரு சாதாரணமான ஞானியல்லர் என்பதை நீர் உணரவேண்டும். அவர் பகவானேடு உடன் வாழ்பவர், அவரது நித்தியத்தோழர். அவர் ஒருமுறை தமது பார்வையை எம் மனிதன் மீதேனும் சங்கற்பத்தோடு செலுத்துவாராயின், அவன் எல்லா உலக பந்தங்களினின்றும் விடுபட்டு, ஞானத்தையும் பெற்று விடுவான். இதை நினைத்துக் கொள்ளும்: பகவான் உலகத்தாரது நன்மையைக்கருதி மனிதனுக அவதரிக்கும் போது, அவர் மஹராஜரைப் போன்ற மஹாத்மாக்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டு வருகிறர்; காரணம், அதனல் அவதார புருடரது உபதேசம் எங்கும் பரவி, அவரது திவ்யநோக்கம் பூர்த்தியாதல் வேண்டும் என்பதே. இல்லையேல், பொதுவாக அம்மாதிரியான அரிய புருடர்கள் உலகத்திற்கு வருவதில்லை. மேலும் மஹராஜர் மரித்து விட்டனரோ? அவரைப் போன்ற ஒரு பெரியார்க்கு மரணமும் உண்டோ? உடலெடுத்ததின் நோக்கம்நிறைவேறியதும், உடற்சுமை கீழே வீழ்ந்து விடுகிறது. நண்பரே, மஹராஜர் தமது ஞான தேகத்தில் இன்னும் எழுந்தருளியிருக்கிறர், பகவானுடைய அடியார்கள் மீது தமது ஆசீர்வாதங்களைப் பொழிந்துகொண்டே வருகிறர். நீர் அவரை மீண்டும் தரிசிப்பீர், நான் உமக்கு உறுதி கூறுகிறேன்.''

அதைக்கேட்ட அன்பர் அதற்குமறுமொழியாகப் பின்வருமாறு கூறலானர்: ''ஆம், தாங்கள் கூறுவது முற்றிலும் உண்மை என்பதை யான் அறிவேன். எனதுசொந்த அனுபவமே சமீபகாலத்துக்கு முன்பு அதை நிரூபித்து விட்டது. மஹராஜர் உலக வாழ்வை ஒழித்ததும், அவர் எனக்கு தீக்ஷை அருளவில்லையே என்பதனல் ஆழ்ந்த துயரத்திற்கு ஆளானேன். என் உள்ளம் அளவு கடந்து அமைதியற்றுக் குலைந்தது; எனக்கு வழிகாட்டியருளுமாறு இறைவனிடம் முழுமனதோடு பிரார்த்தித்தேன். அவர் எனது பிரார்த்தனைக்குச் செவிசாய்த்தார்; ஏனெனில் இன்றைக்கு மூன்று நாட்கட்கு முன்னமே தான் மஹராஜரே கனவில் எனக்குக் காட்சியை அளித்து, தூயமந்திர தீக்ஷையையும் எனக்கு அருளினர். ஆனல் எனது துர்பாக்கியத்தை என்னென்பது! விழித்ததும் யான் அதன் ஒரு பகுதியை மறந்து விட்டேன்; யான் எவ்வளவோ முயன்றும், மறந்த பாகங்களை நினைவிற்குக் கொண்டுவர எனக்கு இயலவில்லை. இக் காரணத்தால் எனது துயரம் முறுகி யான் தங்களை வந்தடைந்தேன். நீங்கள் எனக்கு உதவி செய்யாவிடில் யான் பைத்தியம் பிடித்தவனுவேன். நான் தங்களைப் பிரார்த்தித்துக்கேட்டுக் கொள்கிறேன்; எனக்கு உதவியை அருளுங்கள். அவ்வாறு செய்யத் தங்கட்கு இயலும் என்பதை நான் அறிவேன். தங்கள் மூலம் மஹராஜர் எனது விருப்பத்தை நிறைவேற்றுவார் என்ற உறுதியும் எனக்கு உண்மையாகவே உண்டு.''

மதியிழந்து தடுமாறும் அம்மனிதரது உரையைக் கவனத்தோடு கேட்டுக் கொண்டிருந்தார்; அவரது சிரத்தையில் சுவாமிகள் ஈடுபட்டுப் பின்வருமாறுமொழிந்தார். ''நீர் அஞ்சுவதற்கு யாதொன்றுமில்லை. உமக்கு மஹராஜாது அருள் உள்ளது; அவாது அருளால் உமது விருப்பம் நிறைவேறும். நீர் மந்திரத்தை மறந்துவிட்ட காரணத்தால் மனச்சோர்வு அடைய வேண்டாம். நல்ல காலம் வரும்போது மஹராஜர் மறுபடியும் உமக்குப் போதிப்பார். அவரை நெஞ்சத் துடிப்போடு அழையும்; அவர் உம்மீது தமது ஆசிகளைப் பொழிவார்.''

ஆனால் அன்பர் அதனால் ஆறுதல் அடையாது போனார். திரும்பத் திரும்ப மன்றாடி சுவாமிகளைத் தலையிட்டுக் காரியஞ் செய்யுமாறு வேண்டினார். அதனால் மனமிளகிய சுவாமிகள் உடனே எழுந்தார்; அன்பரை வெளியே காத்திருக்குமாறு சொல்லிவிட்டு, தமது அறைக்கு அடுத்த சுவாமி பிரம்மானந்தரது அறைக்குச் சென்றார். அங்கே சுமார் அரை மணி நேரம் தங்கியிருந்தார்; பின் கதவைத் திறந்து, காத்துக்கொண்டிருந்த மனிதரை உள்ளே தம்மிடம் வருமாறு ஜாடை காட்டி அழைத்தார். இருவரும் சேர்ந்து அறைக்குட் புகுந்தார். சிறிது நேரத்திற்குப் பின் சுவாமி தனியே வெளிவந்தார், அவரது முகத்தில் ஞானானந்தம் ஒளிவீசிக் கொண்டிருந்தது.

பின்னர், அன்பர் வெளியே வந்ததும் புன்னகை பூத்த சுவாமிகள் முன்பு வீழ்ந்து வணங்கிவிட்டு, "எனது ஆனந்தம் பூரணமாயிற்று; ஏனெனில் இன்று மஹராஜர் தங்கள் மூலமாக எனக்கு அவர் கனவில் அளித்த மந்திரத்தையே தந்தருளினார். தாங்கள் அம்மொழிகளை உச்சரித்ததும், யான் அவற்றையறிந்துகொண்டேன். பரமபாவனகுருவே, தாங்கள் எனக்கு மிக்கசந்தோஷத்தை அளித்தீர்கள், இப்போது ஒரே பிரார்த்தனை தங்களிடம் வேண்டிக் கொள்கிறேன். இவ்வாழ்விலேயே எனது இஷ்ட தெய்வத்தின் காட்சியை யான் பெறும்படி ஆசீர்வதிப்பீராக" என்று வேண்டினார்.

சுவாமிகள் அதற்கு மறுமொழியாக, "நீர் உண்மையாகவே பாக்கியசாலி! பண்டைய பிறவிகள் பலவற்றில் நீர் இயற்றியுள்ள நற்கருமங்களின் பயனாக, இப்பிறவியில் இவ்வளவு அருமையான பாக்கியங்களைப்பெற்றுள்ளீர். இனி, ஆழ்ந்து மூழ்கிவிடும்! உமது தியானத்தில் மூழ்கிவிடும! உமது தியானத்தில் ஆழ்ந்து மூழ்கிவிடும், அதனால் நீர் பெற்ற அருஞ் செல்வத்தைத் துணைக் கொண்டு, நீர் இலக்ஷியத்தை அடைவீராக. ஓர் உண்மையான அன்பர் தம்மை முற்றிலும் பகவானுக்கே ஒப்படைத்துவிட்டு, அவரது அருளையும் வழித்துணையையும் முழுதும் நம்பி வாழ்கிறார். பகவான் தமது கருணையைப் பலவழிகளில் காட்டுகிறார்; ஆதலால் அவரையே புகலாகக் கொள்ளும்; அன்பும் பிரேமையும் நம்பிக்கையும் ஞானமும் பெற வேண்டும் என்று அவரிடம் மனப் பூர்வமாகப் பிரார்த்தனை செய்யும்; பழுக்குங்காலம் வரும்போது அவர் தம்மைக் காட்டியருளுவார்; உமது நெஞ்சில் நிறைவு தோன்றும்" என்று தேற்றினார்.

அன்பர்: "யான் இல்லறத்தான், யான் இவ்வுலக நடுவே வாழ்தலில், பல பொறுப்புகளையும் சிக்கல்களையும் உடையேன். இவற்றினின்றும் யான் விடுதலையடையுமாறும், என் முழு மனதோடும முழு நெஞ்சோடும் இறைவனிடம் பிரார்த்தனை புரியுமாறும் எனக்கு ஆசீர்வாதம் அருளுவீராக."

சுவாமிகள்: "எமது ஆசீர்வாதங்களை நீர் பெற்றிருப்பீராயினும் நீர் உமது சாதனங்களைப் பழகிக்கொண்டே வருதல் அவசியம். உமக்குக் கொடுக்கப்பட்டுள்ள மந்திரத்தை ஒழுங்காக ஜெபம் செய்யும்; அதே சமயம் மனமுருகிப் பின் வருமாறு இறைவனிடம் பிரார்த்தனை செய்யும்: 'பகவானே, எனக்குத் துணைசெய்யும்; நான் சரியாக உம்மைப்பற்றித் தியானம் பண்ணும்படிக்கும்,எனதுமனம் உமது மங்களமான திருவடிகளிலே மூழ்கிவிடும்படிக்கும், எனக்கு அருளுமாறு யான் உம்மை மனறாடிக் கேட்கிறேன்.' அவரது செவிக்கு இப்பிரார்த்தனை எட்டும் என்றும், அவர் அதை நிறைவேற்றுவார் என்றும் அறிந்து, இவ்வாறு பிரார்த்தியும். அவரே ஒவ்வொரு நெஞ்சிலும் குருவாவார். அவரே உள்ளிருந்து நமக்கு வழிகாட்டுபவர்; தந்தையும் தாயும் நண்பரும் மனிதருக்கு எல்லாம் ஆகின்றவரும் அவரே. பகவானே மனிதனுக்கு 'மிகச் சொந்தமானவர்,' அவனுக்கு மாறாத நித்தியத் தோழர். ஒருமுகப்பட்ட பக்தியோடு உமது மந்திரத்தை ஜெபித்து வாரும். இப்பழக்கத்தால் உமக்குத் தியான நிலை கைகூடும்; நாளடைவில் பேரானந்தம் பெருகும் உணர்ச்சி வரும். இந்த ஆனந்த அனுபவமே ஒருவகையான தியானமாகும்; அதனால் அவரது முன்னிலையில் (ஸந்நிதியில்) இருப்பதான நினைவு தானே வரும். தியானம பண்ணும் வகைகளும் வழிகளும் உண்மையில் பலவையாகும். முதலில் உயிருள்ளதும், ஜோதிமயமானதும், தெய்வத் தன்மை வாய்ந்ததும் ஆன உமது இஷ்டதெய்வத்தின் வடிவத்தை உமது நெஞ்சமாகிற தாமரைக்குள்ளே அமர்த்தும், பின் அவரது ஜோதி வடிவத்தின் ஒளியே உமது நெஞ்சக் குகையில் விளக்கம் செய்கிறதென நினைக்க முயலும். இவ்வாறு தியானம்செய்வதால், உமது நெஞ்சில் உரைக்கமுடியாத ஓர் ஆனந்தம் நிரம்பும். நாளடைவில் தெய்வ வடிவம் ஆனந்தமயமான சைதன்ய ஜோதிக் காட்சியில் கரைந்துவிடும். அக்காட்சியில் உமக்குப் பேரின்பவயமாகும் நிலை எற்படும்.

"முதன் முதலாக வேண்டுவது, கடவுளைக் காண்பதில் சிரத்தை மிகுந்த பேரவா; இதனைப் பெறுவது நெஞ்சத்தூய்மையால்; நெஞ்

சத் துடிப்போடு நீர் இறைவனை அழைக்கும் போது, நெஞ்சத்திலுள்ள மாசுக்கள் அடித்துக்கொண்டுபோகப்படும், நெஞ்சு தூயதாகும். எல்லா அழுக்குகளும் நெஞ்சத்தை விட்டு முழுதும் நீங்கும்போது அது தானே குருவாக அமரும். உமது சொந்த ஆன்மாவினின்றே ஈசனைக் காண இன்ன வழியிற் செல்லவேண்டும், இன்ன செய்யவேண்டும் எனற அறிவு உதயமாகும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்வதுண்டு: 'அருள் எனும் காற்று எப்போதும் வீசிக்கொண்டே யுள்ளது, ஆனல் நீ அக்காற்றை ஏந்த வேண்டுமானல் பாய்களை விரித்து வைக்க வேண்டும்' என்று. உமது ஞானசாதனங்களைத் திரும்பத்திரும்ப பழகுவதிலிருந்து, இறைவனது அருட்காற்று வீசுவதை நீர் உணர்பவராவீர்.''

அன்பர்: ''சில சமயங்களில், உலகத்தோடு பழகும் போதும் நமது கடமைகளை இயற்றும் போதும், மனத்தை எந்த நிலையில் வைப்பது சரியென்பதை அறிதல் மிகக் கடினமான காரியமாகின்றது.''

சுவாமிகள்: ''நீர் முன்னமே 'ஸ்ரீ ராமகிருஷ்ணரது உபதேசம்' என்னும் நூலே வாசித்திருக்கலாம். மறுபடியும் நீர் அதை ஜாக்கிரதையாக வாசியும். குருதேவரது எளிய போதனைகளில் உமது சங்கடங்கள் அனைத்திற்கும் வேண்டிய மறுமொழிகள் எல்லாம் அடங்கியுள்ளன. எப்போதும் இதை ஞாபகத்தில் வைத்திரும். இவ்வுலகம் உமக்கோ எனக்கோ சொந்தமில்லை. அது அதனைப் படைத்த கடவுளுக்கே சொந்தமானது. உமக்குச் சொந்தமென நீர் கருதும் மனைவி, குழந்தைகள், நண்பர், உறவினர் முதலிய அனைவரும் பகவானுக்கே சொந்தம் என்ற நிலையில் மனதை வைத்துக்கொண்டு உலகத்தில் வாழும். அவர்கள் உம்மைச் சேர்ந்தவர்கள் அல்லர். நீர் அவர்கட்குப் பணி செய்யும் போது, அத்தனை வெவ்வேறு வடிவங்களிலும் பகவானுக்கே பணி செய்வதாக நினையும். இந்நிலையில் மனதை வைப்பதால், உமக்கு உலகத்தின் மீதுள்ள பற்றெல்லாம் மெல்ல மெல்லக் கரைந்துவிடும். அதே சமயம் ஞான மார்க்கத்திற்குரிய விவேகத்தையும் பழகி வாரும்; ஏனெனில், அவ்வாறு பழகுவதால், வைராக்கியம் கிளம்பும்.

உலகத்திலுள்ள பிறர் உறங்கிக்கொண்டிருக்கும் போது, விழித்தெழுந்து தியானம் புரியும். அதுவே தியானத்திற்கு மிகச்சிறந்த காலம். ஞான வாழ்க்கையின் ஆரம்பத்தில் ஒருவன் அதிகமாகப் பாடுபடுதல் அவசியம் ஆனல் நாளாகநாளாக, உழைப்பாலும் சாதனப் பழக்கத்தாலும் நீர் தெய்வ ஆனந்தத்தால் வெறி கொள்வீர். நன்ருக யோசிக்குங்கால், உலக போகங்களில் ஏதேனும் ஆனந்தம் உண்டா? தெய்வ ஆனந்தத்தின் ஒரு துளியை ஒருவன் ஒருமுறை சுவைக்கட்டும்; உலக இன்பங்கள் சுவையற்றனவாய்த் தோன்றும்.''

அன்பர்: ஜெபம் பண்ணும் போது எண்ணுவது அவசியமா?

சுவாமிகள்: ''ஜெபம் மூன்று வழியிற் செய்யலாம். வெளியிற் கேட்கும்படி உச்சரித்தல், தான் மட்டும் கேட்கும்படி உச்சரித்தல், மானசிகம் என்பன அவை. இவற்றுள் மானசிக ஜெபமே மிகஉயர்ந்த வகையினதாகும். இம் மனப் பழக்கத்தை உண்டு பண்ணுவதால், நடக்கும்போதோ உட்கார்ந்திருக்கும் போதோ வேலை செய்யும்போதோ (ஏன்?) தூங்கிக் கொண்டிருக்கும் போதாயினும் சரி, எந்த சமயத்தும் ஜெபம் செய்தல் இயலுகின்றது. எவ்வாறெனில், அப்பழக்கம் வேரூன்றும்போது உறக்கத்தில் நம்மை மறந்திருக்கும்போதும் மந்திரஜெபம் தொடர்ந்து நிகழ்ந்துவரும்; அதோடு இடையருத ஆனந்தப் பெருக்கு உள்ளத்திற் பாய்ந்து கொண்டேயிருக்கும்; ஆனல் ஆரம்பத்தில் எண்ணிக் கொள்வது மிக நன்று. ஒரு நாளைக்கு இரு முறையேனும் ஒழுங்காகத் தியானத்தில் அமர முயலுக. ஒவ்வொரு தடவையும் மந்திரத்தை ஆயிரந் தடவைக்குக் குறையாமல் ஜெபிக்கவேண்டும் என்று தீர்மானித்துக் கொள்க. ஜெபம் அதிகமாக அதிகமாக, நன்மையும் பெருகும்.

''மந்திரமும் பகவானும் வேருகாதஒன்றே என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் எம்மிடம் சொல்வதுண்டு. ஜெபம் செய்யும் போது, உமது இஷ்ட தெய்வத்தின் ஜோதி வடிவத்தில் மனதை நிலைநிறுத்தி வைக்கமுயலும். அதாவது, ஜெபம் செய்யும்போதே தியானமும் செய்யும். பகவான் அன்பரின் நெஞ்சினைப் பார்ப்பார், எத்தனை தரம் நாமத்தை ஜெபிக்கிருர் என்பதையோ ஒரே நிலையில் எவ்வளவு நேரம் அமர்ந்திருக்கிருர் என்பதையோ பார்க்கமாட்டார். பகவானது நாமத்தைப் பூரணமான முழு நெஞ்சார்ந்த பக்தியோடு ஒரு முறை சொல்லுதல் சிதறிய மனத்தோடு ஆயிரம் முறை வீணுக ஜெபிப்பதினும் மிக நன்று. தீவிரஉணர்ச்சி, தீவிரமான துடிப்பு தீவிரமான சிரத்தை-இவையே முக்கியமாக வேண்டிய குணங்கள். பகவான் தம்மைக் காணத் துடிப்பார்க்குத்தம்மை காட்டியருள்கின்ருர். ஆனல் பகவானுக்காகத் தீவி

மாகத் துடித்தலாகிய இங்கிலை ஒரு நாளில் வருவதில்லை. சாதனப் பழக்கம் அவசியம். ஞான சாதனங்களைத் தீவிரமாகப் பழகுவத ஞல், எல்லாத் தெய்வகுணங்களும் நெஞ்சில் கிளம்பும். இயன்றபோதெல்லாம் சாதுசங் கத்தை நாடுவீராக. நல்லோர் இணக்கம் பகவான் மீது எழும் பக்தியைத் தூண்டு கிறது.

"மனம் புறமுகமாகும் வரைதான் சந்தே கங்கள் எழுகின்றன. மனம் மேலும் மேலும் உண்முகமாகும் போதும், பகவா னது திருவடித்தாமரையிலே மேலும்மேலும் குவிந்து நிற்கும் போதும், ஆன்ம உலகினில் அதிக ஆழம் மூழ்க மூழ்க, சந்தேகங்கள் மறைகின்றன. சுத்தமான ஆனந்தம் மட் டுமே மிஞ்சுகிறது. நெஞ்சத்தில் பகவான் மீதுள்ள தூய அன்பு பொங்கி வழிகின்றது.

"ஆனல் பகவானைத் தரிசித்த பின்பே சந் தேகங்கள் முழுதும் இல்லாதொழியும் என் பதே உண்மை. 'அஞ்ஞானமாகிய இருதயக் கிரந்தி (முடிச்சு) அவிழ்ந்து விடுகிறது, எல்லா ஐயங்களும் கரைந்தழிகின்றன, செயல்களின் தீய பயன்கள் அழிந்து விடு கின்றன. எப்போதெனின், ஸகுணமும் நிர்குணமும் ஆன பரம்பொருள் உணரப் படும்போது என்க' என்பது வேதம்."

சுவாமி விவேகாநந்தர்

(சுவாமிகளின் பிறந்த நாள் விழாக் கொண்டாட்டத்தன்று மயிலை மடத்தில் ஆங்கிலத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்)

சுவாமி விவேகாநந்தரின் வாழ்க்கையில் மூன்று வெவ்வேறு பகுதிகள் இருந்தன என் பதைப் பலரும் அறிவர். அவையாவன: மெய்ப் பொருள் நாட்டப்பகுதி, ஞான விளக்கம் பெற்ற பகுதி, சுய இயல்பை வெளிப்படுத்தி ஆக்கத் தொண்டுகளில் ஈடு பட்ட பகுதி என்பன. குருதேவரை அவர் சந்திக்குமுன்பு வாழ்ந்த பால்ய வாழ்க்கை யிற் சிறப்பாக விளங்கியவை: அவரது கூரிய அறிவாற்றலின் வளர்ச்சியும், உண்மையை நாடுவதில் அவர்க்கு ஏற்பட்ட பேரூக்கமும் பேரவாவும் நிலைபெறுதலுமே; இவ்விரண்டும் அவர் வாழவேண்டியிருந்த பெருவாழ்விற்கு அவரை ஏற்றவராக்கின. சடவாதக்கொள் கையையும் ஐயவாதக் கொள்கையையும் அவர் சிறிது காலம் பின்பற்றியதும் உண் மையே. ஆனல் இதுவும் அவர்க்கு உண் மையை நாடுவதில் ஏற்பட்டிருந்த பேரவா வின் விளைவாகவே அமையலாயிற்று; அவர் ஞானப் பொருள்களில் ஐயங் கொண்ட தற்குக் காரணம், அவற்றிற்கு உறுதியான ஆதாரத்தையும் முழுமையாக ருசுவையும் பெறுதலேயாகும். அவர்க்கு மெய்ப்பொரு ளைக் காண்பதில் இருந்த பெரும் ஆசையால், உண்மையை நிலை நாட்டுதற்கு மிகவுயர்ந்த முறைகளைக் கடைப் பிடிக்கலானர்; ஆத லால் முறைக்காகப் பலரோடு இணங்கி ஒன்றை ஒப்புக்கொள்ளுதலும், உறுதி பெருது வழக்காடுதலும் அவர்க்குப் போதிய ஆதாரமாகாது போயின. இவற்ருேடு அவர்க்கு வாழ்க்கையிற் பொறுப்பால் விளைந்த துயர அனுபவமும் நுண்ணிய ஞான உணர்ச்சியைப் பெரிதும் தூண்டலா யிற்று; மெய்ப்பொருளை நாடுவதிற் பசியும் தாகமும் உறச் செய்தது; வாழ்வின் பயனை முழுதும் அறியவும் துணை செய்தது.

நரேந்திரரது ஞானப்பசியை ஸ்ரீ ராமகிருஷ் ணர் மட்டுமே ஆற்ற வல்லாரானர்; நினை வுக்கும் சொல்லுக்கும் அப்பாற்பட்ட மெய்ப் பொருட்காட்சியில் வேட்கையைக் கொளுத்தித் தூண்டிப் பூர்த்தி பண்ணியவ ரும் அவரே. எதையும் சந்தேகத்தோடு துருவியாராயும் நரேந்திரரது இயல்பு குரு தேவரது தெளிந்த மாசற்ற விலகாத கோர மான காட்சியின் முன்பு தலை வணங்கலா யிற்று; உலகில் எவராலும் எதிர்த்து வெல்ல முடியாத ஒரு சீடராக அவர் மாறிவிட்டார்.

குருதேவர் தமது வாழ்க்கையில் அடங்கி யுள்ள ஆழ்ந்த உட்கருத்தைப் பற்றித் தம் சீடர் பிரசாரஞ் செய்தற்கும், தமது பாரத நாடும் பிற உலகமும் கனக்கண்டு வந்த ஞான ஆசைகளைப் பூர்த்தி பண்ணி உயிர்ப் பிப்பதற்கும் அனுமதியையும் ஆணையையும் அளிக்கலானர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் சுருதி, சுவாமி விவேகாநந்தர் ஸ்மிருதி; குருதேவர் ஞானக் காட்சி வடிவம், சீடர் அறிவுக் காட்சி வடிவம்; முன்னவர் சூத்திரம் எழுது வோர், பின்னவர் அதற்குப் பாஷ்யம் வரை பவர். இவ்விருவரது சேர்க்கையால் உண்

டான அற்புதமான தெய்விகச் சிக்கனம் இவ்வாறு இருப்பதாயிற்று.

குருதேவரது மஹாசமாதிக்குப் பின் சுவாமிஜியின் முக்கிய பொறுப்பாயமைந்தது யாதெனில், தம் குருதேவரின் சீடர்களாகிய சிறிய கூட்டத்தைக் குலையாது பாதுகாத்து ஒற்றுமையாக வாழச் செய்தலே. இறுதியான துறவு நிலையையும் அவர் ஏற்றுக் கொண்டார்; தமது நாட்டு மக்களின் நிலைமையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டே நாடு முழுவதும் பிரயாணம் செய்தார்; தமது நாட்டு மக்களின் துயர முழுவதையும் தானே உறிஞ்சி, அதன் வடிவமானார். அம்மக்களை வாட்டிய துயர நெருப்பு அவரது உள்ளத்தைக் கொழுந்து விட்டெரியச் செய்தது; முடிவாக அவர் துயர சாந்திக்கெனக் கண்டு பற்றிய கூரிய உண்மையாவது, மக்கட்குத் தொண்டு செய்யும் வாயிலாகத் தமது பூரணத் தன்மையை (முக்தியை) நாடல் வேண்டும் என்பதே. அக்காலத்திருந்த முட்டுப்பாடான நிலையில் ஞான முயற்சிக்கு வேறு துறையைக் காணலும் அரிதாயிற்று; சிக்காக்கோ சமயப் பெருமன்றம் ஒரு சந்தர்ப்பத்தைத் தரலாயிற்று. எவ்வாறெனில், அவர் தமது நாட்டு மெய்ஞ்ஞானத்தை உலகெலாம் பரப்பவும், தாய் நாட்டின் புனருத்தாரணத்திற்கு இன்றியமையாத பண உதவியோடு மீளவும் விரும்பினார். அத்திட்டம் தாம் கோரிய அளவிற்கு முற்றுப்பேறாது போயினும், ஓரளவிற்கு நிறைவேறிற்று; இந்தியாவிற்கு அவர் இயற்றிய பணிக்கு ஆதாரம் அமைத்ததே அதன் பயன். இந்தியாவிற்காக அவர் கொண்ட துணிவான திட்டத்தின் இரு பக்கங்களாக நின்றவை, வேதாந்தமும் பொது மக்கட்காக உழைப்புமே. தாங்கமுடியாத சிரமத்திற்குத் தம்மை உள்ளாக்கிக் கொண்டமையானும் ஞானப் பேரவாவின் தீவிரத்தன்மையாலும், குருதேவரைப் பற்றிய பெரு நினைவு அவரது உள்ளத்தை இறுகப் பற்றிப் பிழிந்தமையாலும், அவரது உடலம் (எதிர்பார்த்த காலத்திற்கு வெகு முன்னமேயே) விழலாயிற்று.

இந்தியாவிற்கு அவர் அளித்த போதனை யாது? உலக மக்கட்கு அவர் கூறிய முக்கிய உபதேசம் யாது? அவருடைய மொழிகட்குக் காலத்தால் வாடாத பெருங் கவர்ச்சியை ஊட்டுவது யாது? அவரது உபதேசத்தில் அவர் தமது சொந்த நாட்டினர்க்கு எனத் தனியே ஒதுக்கி வைத்த ஒரு பகுதி உள்ளது; அது தற்காலத்தின் போக்குக்குப் பொருத்தமாயுள்ளது. இந்தியாவின் விதியும், அதனை நிறைவேற்றும் வகையும், சமயத்திலும் ஞானத்திலும் அடங்கியுள்ளன என்று அவர் வற்புறுத்துவார். ஞானமே இந்தியாவின் உயிர்நிலையாகும்; எந்நாடாயினும், தன்னியல்பான மேதையையும், தனது சுயதர்மத்தையும் உயிர்ப்பித்தலாலே தன் முழுப் பெருமையையும் மலரச் செய்யலாகும். நமது நாட்டின் தாழ்ச்சிக்குக் காரணம், அதன் அளவுக்கு மிஞ்சிய ஞான ஈடுபாடே எனும் ஆசைக்கொள்கையை, அம்மட்டோ! மூடக்கொள்கையை வேரறுத்து விடுகிறார். அதற்குமாறாக, ஞானக் கிளர்ச்சியிலும் சக்தியிலும் ஏற்பட்ட வறுமை காரணமாகவே நாடு தன்னைக் கிட்டத்தட்ட அழித்து விட்டது என்கிறார். ஆதலாலே, உபநிடத ஞானத்தை உயிர்ப்பித்தற்காக ஏராளமான உழைப்பும், அவ்வுழைப்பின் மிகவுயர்ந்த பண்பும் அவசியம் என்கிறார். மக்கள் தமது தெய்விகப் பெருமையை மீண்டும் உணர்தல் வேண்டும்; அதனால் வரும் பலத்தையும் காட்சியையும் அடிப்படையாகக் கொண்டே, நம் நாட்டின் வருங்கால நிலை எழுப்பப்படல் வேண்டும். தெய்வத்தன்மை நிலையில் விழிப்புறலே இந்தியாவிற்குரிய, ஏன், உலக முழுதிற்கும் உரிய ஒரே வழியாகும்.

பொதுவாக அனைவர்க்கும் பயன்படும் வகையில் உலகிற்கு அவர் அருளிய செய்தி யாது? ஞான வாழ்வு, சமய வாழ்வு சம்பந்தமான உண்மை இன்னது என்பதைக் காணும் முயற்சியைச் சமீப காலத்திற்கு முன்பு . புலக்காட்சி வாதம், யுக்தி வாதம் எனும் நிலையிலிருந்து தவறானதென மறுத்துள்ளனர். சமய நோக்கைப் பெரும் ஜாலக் காட்சியெனவும், உண்மையினின்றும் தப்பியோடும் முயற்சியெனவும், தீக்கோழியின் மனப்பான்மை யெனவும், தப்பிக்கும் நெறி காணும் யந்திரம் எனவும், சுருங்கச் சொல்லின் ஒருவகையான மெல்லிய இயல்பெனவும் கூறி வந்துள்ளனர். வாழ்விலே காணும் தாழ்ந்த உண்மைகளைக் கண்ட மனிதன் அவற்றினின்றும் துள்ளி விலகித், தனக்கென ஒரு சுகமிக்க கனா உலகைக் கற்பித்துக் கொள்கிறான்: இதில் மனித மனத்தின் பலவீனமுற்ற, தருக்கத்தை மீறிய பகுதிகள் உண்மையற்ற திருப்தியையும் நஷ்ட ஈட்டையும் பெறுகின்றன. இவ்வாறு அறை கூவுவாரது (போர்க்கு வலுவிலே அழைப்பவரது) நிலையை முற்றும் உணர்ந்து சுவாமி விவேகானந்தர் நேர்முகமாக எதிர்த்து நிற்கிறார். வேதாந்தியான நிலையில் அவரது எதிர் வழக்காவது: நமது ஐம்புல அனுபவத்திற்கு இலக்காகும் பழக்க உலகம் உள்ளபடி உண்மை

யானதன்று; மெய்ப் பொருளைக் காணும் நாட்டத்தின் இருப்பே அவ்வுலகைத் தாண்டிச் செல்லுதலின் அவசியத்தை வற்புறுத்துகின்றது. இவ்வுண்மையை நிலை நாட்டுதற் பொருட்டு இருவகையான பகுப்பு ஆராய்ச்சி வேண்டும்; பௌதிக விஞ்ஞான முறையை யொட்டிப் புற உலகைப் பகுத்து ஆராய்தலும், நம் உணர்விற்குப் புலப்படும் அக உலகைப் பகுத்து ஆராய்தலும் வேண்டும். தற்காலப் புறவுலக ஆராய்ச்சியினுல் விளைந்த மறுக்க வொண்ணுப் பெரும் பயனுவது, பலவற்றிற்கு நடுவே ஒருமையை உறுதிப்படுத்தலே. பௌதிக விஞ்ஞானத்தின் துணிவான முயற்சியும், நாளும் பெருகி வரும் அதன் பேறுகளின் போக்கும் ஒருமையென்னும் கருத்தை நோக்கியே தான். இயற்கையை ஒரே தனித்தத்துவத்தின் தொழிற் பாடாகவே கருதல் வேண்டும்.

தற்கால விஞ்ஞானத்தின் இரண்டாவது முக்கிய கொள்கையாவது, உள்ளது வெளிப்படல் எனும் கொள்கை. சுவாமி விவேகாநந்தர் அறிவற்ற சட சக்தியினின்றும் உயிரும் அறிவும் வெளித்தோன்றியது என்பதை நிலைநாட்டும் வெறும் வெளிவிரிவுக் கொள்கையிலுள்ள பொருத்தமின்மையை எடுத்துக் காட்டுகிறுர். அத்தகைய கருத்து சூனியத்தினின்றும் சிருஷ்டி உண்டாயதெனும் மூடக்கொள்கையை ஒப்புக்கொண்டதாகும் என்பர். வெளிவிரிவு எனும் கொள்கையைப் பூர்த்திபண்ணவும், பொருத்தமாக்கவும் உள் ஒடுங்குதல் எனும் பழைய கொள்கையைப் ஒப்புக்கொள்ளல் அவசியம் என்பதை வற்புறுத்துகிறுர். உலகெலாம் பரந்த அறிவு உருக்கரந்து உள்ளொடுங்குகிறது, மீண்டும் புறவுலகில் வெளிப்படுகிறது. இவ்வாறு உள்ளத்தைப்பற்றிப் புறத்தே பகுத்து ஆராய்வதால், ஏக மெய்ப்பொருள் எனும் கருத்தும், அதனோடு தொடர்புற்ற மற்றொரு கருத்தாகிய அப் பொருளின் அறிவுமயத் தன்மை என்பதும் பெறப்படுகின்றன.

அனுபவத்தை அகத்தே ஆராய்வதனுல், காண்பான் மாருத ஏகப்பொருளாயிருத்தல் அவசியம் என்பது புலனுகின்றது. காலம் இடம் காரணகாரிய நியதி எனும் மூன்றும் ஆன்மாவைக் கட்டுப்படுத்துவனவல்ல; ஏனெனில் அவையனைத்தும் வியாவகாரிகப் பொருள்களே. தம் இருப்பிற்கே ஆன்மாவின் இருப்பின் அவசியத்தை அவலம்பித்துள்ளன; காட்சி உலகிற் பெறப்படும் பொருள்களே யாதலின் ஆன்மாவைக் கட்டுறச் செய்யமாட்டா. அனைத்திற்கும் அதீதமான ஆன்மா உடலுக்கும் மனத்திற்கும் ஆணவ உணர்ச்சிக்கும் அப்பாலானது. அதன் இருப்பாலன்றி வியாவகாரிக அனுபவமே உண்டாக வழியில்லை.

அறுதியான தத்துவங்களெனும் அகண்டப் பொருள்கள் இரண்டாதல் இயலாதாதலின், புறவுலக ஆராய்ச்சியினுல்விளங்கும் அகண்ட சித்துப் பொருளும், அகவுலக ஆராய்ச்சியினுற் புலனுகும் அதீத ஆன்மாவும் ஏக முழுத் தத்துவமே என்று கொள்ளப்படல் வேண்டும். அதுவே மெய்ப்பொருள். ஆக, சமய முயற்சி—அதாவது வேதாந்த வாழ்வு—உண்மையினின்றும் தப்பித்துக் கொள்வதற்கான முயற்சியன்று, பொய்யினின்றும் மெய்க்கும், இருளினின்றும் ஒளிக்கும், தோற்றத்தினின்றும் பொருள்களின் அக உண்மைக்கும் தப்பித்தலேயாகும் என்று அழுத்தமாகக் கூறவேண்டியதாகிறது.

சமய இலக்ஷியத்திற்கு இணங்கிய வாழ்க்கை தற்கால ஆராய்ச்சியுலகிலே பெரு வழக்கிற்கு இடமாக அமைந்து வந்துள்ளது. ஞான வாழ்வாவது வாழ்வை மறுத்தலேயாகும் என்றும், வாழ்வில் ஏற்படும் பேருக்கத்தையும் வாழ்வின் முழுமையையும் பலவந்தமாக அடக்கி அழித்தலாகும் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. வாழ்வை வறிதாக்க முயலுதலே அது; மனித இயல்பிற்குத் தீங்கு விளைப்பதாகும் அது.

இக்கருத்துடையாரைப் பொர அழைப்பது போன்றே, சுவாமி விவேகாநந்தர் வாழ்க்கைப் பயனைப் பற்றியும் வாழ்க்கைக்குள்ள விதியைப் பற்றியும் தமது கருத்தை வெளியிடுகின்றுர். ஞானிகள் எவ்வாறு நோக்குகின்றனர் என்பதை அவர் இணையற்ற துணிவோடும் தெளிந்த காட்சியோடும் எடுத்துரைக்கின்றுர். சமயம் எந்த வாழ்வை மறுக்க வேண்டும் என்று போதிக்கிறதோ, அந்த இயற்கை வாழ்வு மனிதனது அடிப்படையான இயல்பிற்கு இசைந்ததன்று. மனிதனது முக்கிய இயல்பாவது விடுபட்ட நிலையே, தனியான ஸச்சிதானந்தமென்னும் ஆன்மாவின் அந்தரங்க மேன்மையே; ஐம்புல இன்ப வாழ்வு மனிதனிடத்திலுள்ள மிக ஆழ்ந்த உண்மைக்குக் கேடுவிளைக்கின்றது. இக் காரணத்தால், ஞானநெறியின் இலக்ஷியமான துறவு மனிதனது உண்மையான இயல்பிற்கு விடுதலையளிக்கும் பொருட்டேயாகும். இது ஒரு மறுப்பேயாகும் என்பதில் ஐயமில்லை; ஆனல் மனிதனது உள்ளியல்பான மெய்ம்மையை மறுத்தலாகாது அது. புறத்தோற்றமான மனித இயல்பை, அதாவது,

மனிதனிடத்து அமைந்துள்ள தெய்விக இயல்பின் சிதைந்த பொய்யுருவத் தோற்றத்தை—மறுத்தலேயாகும். பலவந்த அடக்கமாகிய ஒன்றைப் பலவந்தமாக அடக்குதலே அது; அழியும் இயல்பினதாய மண்கூட்டிலிருந்து அகண்ட விடுதலை நிலைக்குத் தப்பித்துக் கொள்ளுதலே அது.

எவ்வகைத் தூண்டுதல்கட்கும் உட்பட்டு வாழும் வாழ்க்கையை இயற்கை வாழ்வென்பர்; இவ் வாழ்வில் மனிதனது உண்மையியல்பு மறைபட்டும் அடக்கப்பட்டும் உள்ளது என்பது அவ்வாழ்விற் காணப்படும் தடுக்கவொண்ணாத முரண்பாடுகளாலே வெளிப்படும். சுவாமி விவேகாநந்தர் பொருள் கூறியுள்ளபடி மாயையின் உண்மையான பொருளிதுவே. அறிவுத்துறையிலும் உணர்ச்சித்துறையிலும் அறத் துறையிலும் மனிதன் கைக்கொள்ளும் முயற்சியை ஆராயின், அவ்வாழ்க்கையின் அடிப்படையிலே நிலையான ஒரு முரண்பாடு தோன்றுகிறது. வாழ்க்கையின் ஆழ்ந்த பிரதேசத்திலே அடிப்படையான நிலையாமையொன்று உள்ளது, ஆதாரத்திலே ஒரு முரண்பாடன்றோ அது. புறத்தோற்ற மனித வாழ்விலுள்ள முரண்பாடுகளால் அம் மனிதனது பொய்ம்மை வெளிப்படுகின்றது, மனிதனது அதீத இயல்பையும் இருப்பையும் பற்றிய உணர்ச்சி எழுப்பப்படுகிறது. ஆக, வெளி வடிவில் ஞான வாழ்வு ஒரு மறுதலையேயானாலும், மனிதனது உள்ளடங்கிய தன்மையிலும் நோக்கத்திலும் நிலையான ஓர் உண்மையை நாட்டுதலும் உறுதிப்படுத்தலுமே அது என்பது அறியக் கிடக்கின்றது; எவ்வாறெனின், அது மனிதனது மயக்கத்தன்மையை நீக்கித் தெளிவித்துத் தெய்வ இயல்பை உணரச் செய்தலேயாகும்.

சுவாமிகள் நாட்டும் தத்துவத்தையும், ஞான முயற்சியின் இலக்ஷியத்தையும் அறிந்த பின்பு, சாதனத்தைப்பற்றி அவர் கூறுவதையும் சுருங்கவுரைத்தல் அவசியம். ஞானமடையும் நெறி—அதாவது சாதன நெறி—சுவாமிகளின் கருத்துப்படி நான்கு விதமான ஐக்கியத்தை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது.

1. முதலாவது, வாழ்விற்கும் நினைவிற்கும் உள்ள ஐக்கியம் அது. ஒரு கருத்தினை ஒப்புக் கொள்வதன்று சமயம், மெய்ப்பொருளுணர்வே அது. வாழ்வே பரம்பொருட் காட்சியால் மாறுபாடடையும் வரை, உள்ளடங்கிய தெய்வத் தன்மையான உயிர்நிலையை மீண்டும் பெறும் வரை உண்மையான ஞானம் இல்லை. அனுபூதிக்குக் கொண்டுவர முடியாதாயின் அது ஞானமாகாது; சமய வாழ்வில் அனுபூதியாவது அதீதப் பரம்பொருளினிடம் முழு வாழ்வு பெறுதல் அல்லாது வேறொன்றில்லை.

2. இரண்டாவதாக, தனி வாழ்விற்கும் அகண்ட (எங்கும் பரந்த) வாழ்விற்குமுள்ள ஐக்கியம் அது. வாழ்வு முழுவதும் ஒன்றே என்னும் உண்மை நமது ஒழுக்கத்திற்கு அடிப்படையான உயிருள்ள கொள்கையாக அமைதல் வேண்டும். நீதிநெறியின் ஸார முழுதும் இதுவே; வேதாந்தம் அத்தகைய வாழ்வின் அடிப்படையை நமக்கு அளிக்கிறது. இவ்வாறு ஞான வாழ்வு மனிதத் தன்மையை எய்துகிறது, மனிதத்தன்மை ஞான இயல்பை எய்துகிறது.

3. மூன்றாவதாக, சாதன வாழ்க்கையில் மனிதனிடத்துள்ள அற உணர்ச்சி, பக்தி, அறிவு, மன அடக்கம் எனும் நால்வகை ஆற்றல்களும் ஒருங்கே வளர்ந்து, ஐக்கியப்பட்டு நிற்றல் வேண்டும். இத்தகைய தொகுப்பினால்தான் ஆன்ம சக்தியால் வினையும் அனைத்தையும் முற்றும் பெற முடியும்.

4. நான்காவதாக, அது எல்லாச் சமயங்களின் சமரசமாக வேண்டும். பரந்து விரிந்து அனைத்தையும் உள்ளடக்கிய உண்மையான நோக்கு உண்டாதற்கு இவ்வுலகிலுள்ள எல்லாச் சமய நெறிகளையும் ஒப்புக்கொள்ளுதல் அவசியம். எல்லாச் சமயங்கட்கும் அடியிலே அமைந்துள்ள உலகப் பொதுவான கொள்கைகளை விளக்குதல் நிர்க்குணப் பிரம்மத்தைப்பற்றிப்பேசும் வேதாந்தத்தின் பொறுப்பாகும்.

இம்மாதிரியாகப் பல அம்சங்கள் ஒன்றாய் இணைந்து நிற்கும் முழுமையை ஒதுக்காத முயற்சியால் மனிதன் பரமமான மெய்ப்பொருளுணர்ச்சியெய்தும் ஞான விழிப்பு நிலையைப் பெற்று முக்தியடைகிறான்.

நமது சிகர ஜோதி

உலக அமைதியும் அதற்குரிய நெறியும்

இந்நாளைய உலக வாழ்விலே எங்கணும் பெருங் குழப்பமும் பல சங்கடங்களும் காணப்படுகின்றன. எந்நாட்டிலும் அரசியல் பொருளாதாரம் ஸமுதாயம் பண்பாடு மதம் எனும் ஐந்து துறைகளிலும் பலவகையான அல்லல்களும் இடையூறுகளும் கிளர்ந்தெழுந்து, மக்களின் மனத்தை வாட்டுகின்றன. ஒரே நாட்டிலே தனி வாழ்க்கையும் சமுதாய வாழ்க்கையும் ஒன்றை மற்றொன்று பாதிப்பதோடு நில்லாது, உலகத்துள்ள பல நாடுகளும் ஒன்றோடொன்று எத்துறையிலேனும் தொடர்புற்றிருத்தலின், ஒரு நாட்டின் வாழ்வு ஏனைய நாடுகளின் வாழ்வுகளை ஓரளவில் தகைவதாகின்றது (கட்டுப்படுத்துவதாகின்றது.) பொருளாதாரத் துறையில் ஒரு நாட்டிற்கு நேரும் செழிப்போ வறுமையோ வெகு தொலையில் உள்ள வேறொரு நாட்டையும் எவ்வாறேனும் பாதியாதொழிவதில்லை; அங்ஙனமே அரசியல் துறையில் ஒரு நாட்டிலுள்ள குழப்பம் பிறநாடுகளின் கவனத்தையும் தொடர்பையும் பலவந்தமாகப் பெறுகின்றது. ஒரு நாடு சிறிதெனினும் பெரிதெனினும், அதற்குப் பிறநாடுகளின் தொடர்பு எவ்வழியாலேனும் இன்றியமையாது வேண்டப்படுகின்றது. தற்கால வாழ்க்கை முறையில் பல நாடுகளும் நன்மைக்கோ தீமைக்கோ ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டுள்ளன. இருபெரும் உலகப் போர்களும் அவற்றின் விளைவுகளும் இந்த உண்மையை எல்லா நாட்டினருக்கும் நன்கு விளக்கியுள்ளன. போரினால் பொருள்களும் பணமும் உயிரும் நஷ்டமாதலின், மனத்துயரம் பெருகுகின்றது, உலகப் போரிலே தலையிட்டுப் போர்புரிந்த நாடுகளும் தலையிடாத நாடுகளும் ஒருங்கே போரால் அவதிப்படலாயின. இதனாலன்றோ 'போர்' எனும் பெயரைக் கேட்டதும் எந்நாடுகளும் நடுங்குகின்றன. அதனால் உலக அமைதி மனித வாழ்விற்குரிய பல துறைகளிலும் குலைந்துவிடுகிறது. இதுபற்றியே போரினை ஒழிக்கும் வகையைப்பற்றி வலியாரும் மெலியாரும் தனித்தும் ஒன்றுகூடியும் ஆராய்ந்து வருகின்றனர். தற்சமயம் போரெனும் புயல் உலகெங்கும் பெருவாரியாக வீசவில்லையெனினும், சிற்சில இடங்களில் நிகழும் சில்லறைப் போர்களே உலகப் பெரும் போரைத் துவக்கும் காரணமாகுமோ எனும் அச்சம் எங்கும் உலவி வருகின்றது. உண்மையாதெனின். போர் இல்லையெனினும், போர்க்காரணங்கள் ஒழிந்தபாடில்லை. போர்த்தீ கொழுந்துவிட்டெரியவில்லை யெனினும், நீறு பூத்த நெருப்பைபோன்று, அது உள்ளடங்கி மறைவாயுள்ளது; அது அணைந்தபாடில்லை வேண்டும் போது அதனைப் பற்றி யெரியச் செய்யும் நிலையில் தயாராக அதை வைத்திருக்கப் பலவகை முயற்சிகளும் கையாளப்படுகின்றன. ஆதலின் உலக அமைதி பேச்சளவேயன்றிச் செயலளவில் இல்லை; எனினும் அதில் அனைவர்க்கும் பெருவிருப்பம் உண்டென்பதையும் மறுக்க எவராலும் ஒண்ணாது.

போரை ஒழித்து அமைதியை நிலைநாட்டுதலாகிய முயற்சி போர் புரிதலினும் மிகச் சிக்கலானதும், வருத்தம் மிருந்ததும் ஆகும், உலக அமைதியைப் பெறவேண்டின், பல ஜாதியரும் பல நாட்டினரும் மனம் ஒன்றுபட்டு, சமூக வாழ்விற்குரிய துறைகள் பலவற்றிலும் ஒத்துழைக்க முன்வரவேண்டும். உலகத்திலுள்ள பற்பல அறிஞர்களும் உலக அமைதி நெறியைக் குறித்துப் பல முறை தனித்தும் ஒன்றுகூடியும் சிந்தித்துள்ளனர்; தத்தமக்குத் தோன்றிய யோசனைகளை வெளியிட்டுள்ளனர்; அவை யொன்றுக் கொன்று முரண்பட்டனவாயும் உள்ளன. பொதுவாகத் கூறுமிடத்து, இதுவரை யாதொரு திருப்திகரமான யோசனையையும் எவரும் கூறியதாகத் தெரியவில்லை. காரணம் யாதெனின், பற்பல வல்லரசு நாடுகளைச் சேர்ந்த அரசியல் நிபுணர்களே சில முறைகள் சந்தித்து, உலக அமைதியையும் உலகக்ஷேமத்தையும் தரும் ஒருதிட்டத்தை அமைப்பதற் பொருட்டு ஆராய்ச்சி செய்துள்ளனர்; அவர்கள் கூட்டிய பேரவைகளும், செய்து கொண்ட ஒப்பந்தங்களும் எவ்வித நிலையான பயனையும் அளித்ததாகத் தெரியவில்லை.

தற்போது உலக அரங்கினிலே முன்வரிசையிலே நிகழும் வல்லரசு நாடுகள் உலக அமைதியை நாட்டுதற்கென இரண்டு திட்டங்களையே கைக்கொண்டு வந்துள்ளன. அவற்றில் ஒன்று: "அமைதி வேண்டின் போர்க்குத் தயாராயிரு" என்னுங் கொள்கையை ஒட்டியது. மற்றொன்று: வல்லரசு நாடுகள் சில ஒன்றுகூடி ஒத்துழைத்து, உலகிலுள்ள ஏனைய நாடுகள் மீது தமது அதிகாரத்தைச் செலுத்தி போர் நிகழவொட்டாது தமது மொத்த வலிமையால் தடுத்தல் என்பது. இருவகையினரும் உலக அமைதியைப்

பலவந்தத்தால் நிலைநாட்டலாகும் என்று நம்புகின்றனர். இவர்கள் தமக்கு அரணாக நினைக்கும் அதிகாரமும் வலிமையும் அரசியலமைப்பையும் ராணுவ பலத்தையும் பொறுத்தனவாகின்றன. போரில் வெற்றிபெறுதற்கு ராணுவ வலிமையே கருவியாயின், அவ்வலிமையே உலக அமைதியையும் பாதுகாக்க உதவும் என்பர் அன்னார். ஆனால் வலிமைக்கு அஞ்சிச் சரண்புகும் பகைவர் பகைமையை மறவாது போற்றித் தமக்கு வெற்றியைத் தரும் சாதனங்களை நாடுவதிலும், பழிக்குப் பழி வாங்குங் காலத்தை எதிர்நோக்குவதிலும் கருத்தாயிருப்பார். அதிகாரத்தாலும் வலிமையாலும் வற்புறுத்தப்படும் அமைதியை மக்கள் நெஞ்சார ஒருக்காலும் விரும்பரார்; அது உண்மையான அமைதியாக மாட்டாது. வில் வளைவது பின் நிமிர்ந்து அம்பை வேகமாகச் செலுத்துதற்கே; பூனை பதுங்குவது தக்க சமயத்திற் பாய்ந்து இரையைக் கொல்வதற்கே. அதுபோல, பலவந்தத்தால் விளையும் சமாதானமும் போலிச் சாந்தியேயாகும்; சிறிது காலம் புறப்பகை தணியதுவாயினும் அகப்பகை வளர்ந்து வெம்போர் புரியத் தயாராக்கும் சமயமாகும்; சண்ட மாருதம் வீசுமுன் காற்று அடங்கியிருப்பது போலாகும். அன்றியும் வல்லரசு நாடுகள் ஒன்றுகூடி அதிகாரஞ் செலுத்த முயலும்போது, அவர்கட்குள்ளே போட்டியும் பொறாமையும் தோன்றுகின்றன. நாளடைவில் ஒற்றுமைகுலைந்து தேய, வேற்றுமை வளர்ந்து வலுத்துப் போரை மூட்டுகின்றது. அதிகாரஞ் செலுத்தும் அரசியல் முறையே போர்க்கு விதையாகும். பெரு நாடுகளே பெரும் போர் புரியும் ஆற்றல் படைத்துள்ளன. 'அதிகார வட்டாரங்களை'யும் 'ராணுவ ஒப்பந்தங்களை'யும் ஏற்படுத்துதலும், பலநாடுகள் கூடிப் பொதுவாக ஏற்படுத்தும் படையால் 'உலகக் காவல்' தொழிலை நடத்துவதும்—இத்தகைய உபாயங்கள் சாந்தியை வளர்க்க உதவாது போர்த்தீயை மூட்டவே பயன்படும்.

உலக அமைதியை அடைதற்குரிய சரியான நெறியைக் காண வேண்டின், அதற்குமுன் நமது மனக் கண்ணெதிரே உலக அமைதி நிலவும் காட்சியைத் தெளிவாகப் படம் வரைந்து காணவேண்டும். குறிக்கோளை (இலக்ஷியத்தை) இன்னதென அறியாதார் அதனைச் சார்தற்குரிய நெறியை அறியமாட்டார். இலக்ஷியத்தின் உயர்வுக்கேற்ற நெறி வேண்டுமன்றே? உலகமெங்கும் அமைதி நிலவும் காலம் நாடுகள் என்ன நிலையிலிருக்கும்? அதைச் சற்று ஆழ்ந்து சிந்திப்போம். "அதிகாரம் செலுத்தும் வலிய நாடுகள் ஏனைய மெலிய நாடுகளோடு வலுவிலே போர் தொடங்கும் நினைவுகளையும் தற்பெருமையை நாடும் நினைவுகளையும் முழுதும் ஒழித்துவிடும்; அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கும் நாடுகளில் மக்களுடைய நெஞ்சங்களில் அச்சமும் அவநம்பிக்கையும் மனக்கசப்பும் சற்றும் இல்லாதொழியும்; உலகத்திலுள்ள பலவகை மக்களும்—சிறியோரும் பெரியோரும், வலியாரும் மெலியாரும், வெண் தோலினரும் கருப்புத் தோலினரும் சிவப்புத் தோலினரும் மஞ்சள் தோலினரும், நாகரிக முற்றவரும் நாகரிகமற்றவரும் ஒரே மனிதக் குடும்பத்தினரைப் போன்று, அன்பாலும் அனுதாபத்தாலும் ஒத்துழைப்பாலும் ஒன்றாகப் பிணைக்கப்பட்டு ஒற்றுமையோடு வாழ்பவராவர். அம்மட்டோ! பற்பல நாடுகளில் வழங்கிவரும் அரசியல்முறைகள் யாவும் ஒன்றோடொன்று தொடர்புற்று, உலகப் பொதுவான ஆட்சிமுறை யொன்றை உண்டாக்கும்; ஒவ்வொருநாட்டின் பொருளாதார நிலையும் உலகப் பொருளாதார நிலையெனும் உடலின்கண் அமைந்த ஓர் உறுப்பாக நிற்கும்; பற்பல ஜாதியர்க்குட் காணப்படும் சமூக வாழ்வு நிலையங்களில், மனிதனுக்கும் மனிதனுக்கும் உள்ள வேறுபாடு நீங்கும், எவரும் தமக்கென அளவிற்கு மிஞ்சிய உரிமைகளை நாடமாட்டார், குறுகிய மனமும் காரணமின்றிய மனச்சாய்வும் மறைந்துவிடும்; உலகத்திலுள்ள வெவ்வேறான சமய நெறிகளும் முரட்டுப் பிடிவாதத்தையும், சகிப்பின்மையையும், நம்பிக்கை வெறியையும் வேரோடு பிடுங்கி யெறிந்துவிட்டு, ஒரே உலகப் பொதுவான சமயத்தருவின் (மரத்தின்) பற்பல கிளைகளைப் போன்று சமரச மனப்பான்மையோடு வாழும்." உலக நிலை இவ்வாறு அமையும்போது மட்டும்தான் உலகெங்கும் அமைதி குடிகொள்ளும். இத்தகைய அமைதி நிலவ, எல்லா நாடுகளிலும் ஒரேவித அரசாட்சியும், ஒரேவிதப் பொருளாதார முறையும், ஒரேவித சமுதாய வாழ்வும், ஒரேவிதப் பண்பாடும், ஒரேவித மதமும் இருக்க வேண்டும் எனும் அவசியமில்லை; ஒவ்வொரு நாட்டு மக்களின் இயல்பிற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு முற்கூறிய ஐந்து துறைகளிலும் வேறுபாடுகள் இருக்கலாம்; எனினும், இவ்வேறுபாடுகள் ஒரு கரத்திலுள்ள ஐவகை விரல்கட்குள்ளவை போன்று தனிச் சிறப்பினை ஊட்டி, ஒரே கரத்தின் பகுதிகளாதலின் ஒத்துழைப்பிற்கு இடையூறாகாமல் அதன் முழுநலனுக்கு இன்றியமையாதவை

யாகிவிடுகின்றன. 'ஒன்றே குலம்' 'ஒன்றே வாழ்வு' 'ஒன்றே இலக்ஷியம்' என்பதை உணர்ந்து, உலகம் முழுதும் எல்லாத்துறை களிலும் (பரஸ்பரம் சம்பந்தமுற்று) மக்கள் ஒரே உடலின் பல அங்கங்களாக அமைந்து, பொதுநலனும் தனித்தனி அங்கங்களின் நலன்களும் ஒன்றோடொன்று முரண்பாடின்றியவாகி, வாழ்க்கையை நடத்துவ ராயின், அப்போது நிலையான சாந்தி உலக மெங்கும் நிலவக்கூடும்.

இத்தகைய உலக அமைப்பை உண்டு பண்ணுதற்கு இன்றியமையாத தேவையா யாவது, சாந்தியின் மீதுள்ள பெரும்பற்றே. தனி வாழ்க்கையிலேனும் ஸமூகவாழ்க்கையி லேனும் சாந்திக்கு இணையானதொரு பேறில்லையாதலின், அதனைப் பெறும் உண் மையான அவா மக்களின் உள்ளங்களில் தலையெடுத்தல் வேண்டும்; அந்த அமுதினைச் சுவைத்தற் பொருட்டு வாழ்க்கையில் தோன் றும் ஏனைய சில்லறை அவாக்களை அடக்கி யொழிக்க அரும்பாடுபடத் தயாராயிருத்தல் வேண்டும். பெயரளவிலே சாந்தியை விரும் புவதாகக் கூறுவதொன்றே போதாது; அதற் குரிய விலையை அளிக்கும் துணிவு வேண்டும். அமெரிக்க மாகாணத் தலைவர் லிங்கன் என் பார் ஒரு சமயம் ஒரு நண்பரிடம் 'ஒரு நரி யின் வாலையும் காலென்று அழைப்போமா யின், அதற்கு எத்தனை கால்கள் இருக்கும்?' என்று வினவினர். அதற்கு உடனே அந்நண் பர் 'ஐந்து' எனும் மறுமொழியளித்தாராக, அப்பெரியார் 'எவ்வாறு? வாலைக் காலென அழைப்பதாலே அது காலாகுமா?' என்று நினைவூட்டினராம். சாந்தியில் உண்மையான அவா எழாதபோது, வல்லரசு நாடுகளின் தலைவர்கள் 'அனைவர்க்கும் சுதந்திரம் வேண் டும், அனைவர்க்கும் சம உரிமை வேண்டும்' என்றும் பிரசங்க மேடைகளில் மட்டும் பேசு வதால் யாது பயன் விளையும்? உலக அமை திக்காக ஏற்படுத்தும் திட்டங்கள் பிறக்கும் போதே செத்துப் பிறக்கின்றன; பல நாடு களும் ஒன்றுகூடிப் புதிய பொதுச் சங்கங் களையும் சட்டதிட்டங்களையும் ஒப்பந்தங்களை யும் நிலை நாட்டினாலும், அவை போதியவாகா; போர்க்கருவிகளையும் போரையும் ஒழிக்கச் சட்டங்களை விதிப்பினும், உலக நிர்மாணத் திட்டம் ஒன்றை உயர்ந்த இலக்ஷியத்திற் கிணங்க ஏற்படுத்தினும், இயன்றமட்டும் முன் எச்சரிக்கைகளோடு உலகப் பாதுகாப் புச் சங்கம் ஒன்றை நிலை நாட்டினும், இவற் வற்றில் எதுவும் சாந்தியில் மெய்யான அவாக் கொள்ளுதற்கு ஈடாகாது; அந்த அவாவை எழுப்பவும் வளர்க்கவும் எரியச் செய்யவும் உதவாது.

அரசியல் உலகிலோ பொருளாதார உல கிலோ வல்லரசு நாடுகள் தமக்குத் தற் போது கிடைத்துள்ள முதன்மைப் பதவிகளை இழக்காது போற்றுதற்கே திட்டங்களை மேலும் மேலும் அமைக்க முயலுகின்றன; ஆனால் இம்முயற்சிகள் உலக அமைதியை நிலை நாட்டத் துணைகளாகா என்பது வெளிப் படை. இந்நாடுகளின் தலைமைப் பதவியே போரை விளைக்கப் பலமான காரணமாகின் றது. அன்னிய ஆட்சி அதனைச் செலுத்து வோரின் உள்ளங்களையும் அதற்கு உட்படு வாரின் உள்ளங்களையும் கறைப்படுத்தும் இயல்பினது. அதனால் உட்படுவோரின் உள் ளங்களில் மனக்கசப்பும் பகையும் வெறுப் பும் தோன்றித் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகின்றன; அடக்கு முறையின் கடுமையும் உட்படுவோரின் பலவீனமும் அப்பகை நெருப்பை அவிக்க இயலாது போகின்றன ஆதலின், பகைமை புகைந்து கொண்டேயிருக்கின்றது. ஆட்சியைச் செலுத்துவோருடைய உள்ளங்களிலோ பொறாமையும் அவநம்பிக்கையும் சினமும் குடிகொள்கின்றன; இவை எங்கேனும் எழும்போர்க்கு எண்ணெய் ஊற்றாக விளங் குகின்றன. ஓரிடத்தில் ஒரு வல்லரசின் ஆதிக்கியம் ஏற்படும்போது, வேறிடங்களில் ஏனைய வல்லரசுகள் தமது ஆதிக்கியத்தை நிலைநாட்டுவது அவசியமாகிறது. ஒரு நாடு தற்பாதுகாப்புக்காகத் தன் அதிகார எல் லையை விரியச் செய்யும்போது, பிறர்க்கு அது அச்சத்தைக் கிளர்விக்கிறது. இக்கார ணத்தால் தற்பாதுகாப்பிற்காகப் போட்டி வளர்கிறது; அப்போது தற்பாதுகாப்பிற்கும் தன் அதிகார எல்லையை விரித்தற்கும் உள்ள இடைவரம்பு காண இயலாது மறைகின்றது. ஆகவே ஒரு நாட்டின் நலன் இன்னொரு நாட்டின் நலனுக்கு முரணாக, உலகமெங்கும் பெருவாரியாகப் போட்டியும், ஒருவரோ டொருவர் பன்முறை உரசிக் கொள்ளுதலும் தாமே விளைகின்றன.

தற்கால அரசியல் உலகிலே காணப்படும் மனப்போக்கை 'ஆட்சி மண்டலங்கள்' 'அதி காரஞ் செலுத்தும் குழுக்கள்' 'தருமப் பொறுப்புகள்' 'ஆபத்தற்ற வட்டாரங்கள்' எனும் தொடர் மொழிகளினின்றும் அறிய லாகும்; அவை தவறான நெறியிற் செல்லு தற்கு அறிகுறிகளாகும். அன்னிய ஆட்சி நிலவும் பிரதேசங்களைப் பெருக்கிவருதற்குப் பதிலாக, தற்சமயமுள்ள அன்னிய ஆட்சியை

ஒழித்துப் புதுப்போர் தொடங்குவதைத் தடுத்து, உலகமெங்கும் எல்லா நாடுகட்கும் சுதந்திரத்தை அளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். உலக அரசியல் அரங்கங்களிலும் அதிகாரிகளின் உள்ளங்களிலும் இக்கருத்து குடிபுகுமாயின், உலக அமைதிக்கு ஒருவாறு வழியுண்டாகும். வல்லரசுகளில் ஒன்றேனும் முழுமனதோடு உலகெங்கும் சுதந்திரத்தை நிலைநாட்டும் பொருட்டு முன்வருமாயின், அதற்கு நேரும் எதிர்ப்பு முழுதும் நாளடைவில் தேய்ந்து மாயும்; நீதி எங்கும் தலைநிமிர்ந்து நிற்கும்; நிலையான சாந்தியுண்டாகும் பொருட்டுப் பாதையைச் செப்பனிட்ட பணியாகும் அது.

உலக சுதந்திரத்தை வற்புறுத்தும் காரணம் யாதெனின், அன்னியராட்சி எவ்வளவு சுயநலமற்றதாய் அமையினும், தன்னாட்சிக்கு ஈடாகாது என்பதே. பொதுப்படக் கூறுங்கால், வெற்றி பெற்றவரது ஆட்சி அடிமைப் பட்டோரது முழு நலனையும் உயர்ந்த நலனையும் பாதுகாப்பதற்காக அமைவதில்லை; அடக்கியாள்வதால் மக்களின் நெஞ்சங்களைக் கவரும் இனிமை ஆள்வோர்க்கு உண்டாவதில்லை. தனிவாழ்க்கையிலேனும் சமூக வாழ்க்கையிலேனும் சுதந்தர வாழ்வாலன்றி மக்கள் வளர்ச்சி பெறுவதில்லை. அன்னியரது ஆட்சி ஒரு நாட்டினரின் நெஞ்சில் உறுத்திக் கொண்டிருக்கும்போது, அந்நாட்டினர் இயல்பான வளர்ச்சியை அடைய இயலாது. எனினும், சுதந்திர வாழ்வு பிறநாட்டினரிடமிருந்து ஒத்துழைப்பையும் வழித்துணையையும் உதவியையும் பெறுதற்குத் தடையாவதில்லை. வலிய நாடுகள் எளிய நாடுகளின் காரியங்களில் வலியவே தலையிட்டு மெல்ல மெல்ல அவற்றை அடிப்படுத்துதலை யொழித்து, வேண்டிக் கொள்ளப்படும்போது தன்னயமற்ற உதவியை மட்டும் அளிக்குமாயின், எந்த எளிய நாடுதான் சுய ஆட்சியை நடத்தும் திறமையற்றிருக்கும்? ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் உள்ள அடிமைக் குடிகள், தமது நில உரிமையையும் ஆட்சியுரிமையையும் வலியார் பறிக்கும் முன்பு நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகத் தம் நாட்டைத் தாமே ஆண்டு வரவில்லையா? இக்காலம் சிறுநாடுகள் ஒன்றோடொன்று போர்புரிந்து வருவதினும் அதிகமாக முற்காலம் அவை முரண்பட்டும் எதிர்த்தும் வாழ்ந்து வந்தனவா? ஆயினும் வென்ற வலியார் அடிமையுற்ற எளியார்க்குச் சுய ஆட்சியை நடத்தும் வயதும் தகுதியும் வரவில்லையென்று முரசறைந்து வருகின்றனரல்லவா? அமெரிக்க நாட்டுப் போர் வீரர் ஒருவர் சீனதேசத்தானிடம் "நாங்கள் நீகிரோ ஜாதியனரை அடிமைத் தனத்தினின்றும் விடுவித்தோம்" என்று பெருமை பேசிக் கொண்ட போது, அச்சீனக்காரன் "அவரை அடிமையாக்கியவர் யார்?" என்று இடித்துரைத்தான்.

உள்ளதை உள்ளவாறு உரைக்கின், எந்தச் சிறு நாடும், நாகரிக முற்றதாயினும் அற்றதாயினும், தன் காரியங்களைச் சரிவர இயற்றிவருதற்கும், உள்நாட்டுச் சச்சரவுகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் வேண்டிய அளவிற்கு அறிவு பெற்றுள்ளதேயாகும். அண்டையிலுள்ளார் அந்நாட்டிற்குத் தீயன செய்யும் நினைவுகளை முற்றும் ஒழித்தவராயிருப்பின், அது தன் சங்கடங்களைத் தானே நீக்கிக்கொள்ளும் வழியைத் தேடிக் கண்டறியும். பிற நாட்டைத் தன் அடிமையாக்கி அதன் உணவையும் சுகத்தையும் பறித்துத் தன் வயிறு வளர்த்துப் பருக்கும் உரிமை எந்நாட்டுக்கும் இல்லை; அத்தகைய செயல் பெரும் பாவமுமாகும். ஒரு வல்லரசுக்கு இரையாகாது ஓர் எளிய நாட்டைப் பாதுகாப்பதற்குத் தக்க கைம்மாருக வேறொரு வல்லரசு அதனைத் தனக்கு அடிமையாக்குதல் முறையன்றே. முறையன்று என்பதை உணர்ந்தும் சுயநயப்பற்றின் உறைப்பால் எத்தனை வல்லரசுகள் இச்செயலைத் தொடர்ந்து இயற்றித் தம் பதவியைப் பெறலாயின?

முற்கூறிய கருத்துக்களைச் சிந்திக்கும் போது, உலக அமைதி நிலமிசை நீடுவாழ்தலை விரும்புவோமாயின், பின்வரும் இரு பேருண்மைகளை மறவாது போற்றுதல் வேண்டும் என்பது பெறப்படுகின்றது. (1) எல்லாநாட்டினருக்குள்ளும் ஜாதியர்க்குள்ளும் ஒற்றுமையின்றி உலகத்தே அமைதி நிலவ இயலாது. இந்த ஒற்றுமைக்கு இன்றியமையாது வேண்டப்படுவது, ஒன்று கூடினர்க்குள் சம உரிமை யுணர்ச்சியே. அனைவரும் தனித்தனியே சுதந்தரமுடையராயிருந்தாலன்றிச் சம உரிமையென்பது பொருளற்றதாகின்றது. (2) உலகத்துள்ள நாட்டினரையும் ஜாதியினரையும் ஒன்றுகப் பிணைக்க, அறவுணர்ச்சியால் விளையும் நற்குணமெனும் கயிறு பெற்றாலன்றி, உலக ஒற்றுமை கைகூடாது. உலகத்துள்ள நாடுகள் பலவும் ஒருங்கு கூடிச் சில ஒப்பந்தங்களைப் பற்றிய தீர்மானங்களைத் தமது கூட்டத்தில் நிறைவேற்றினும், அவை பயன்தருவது அந்நாட்டினரின் நற்குணத்தையே பொறுத்துள்ளதாகின்றது. நீதியையும் வாய்மையையும் கருணையையும்

கடைப்பிடிக்க அனைவரும் கங்கணம் கட்டிக் கொள்ளவேண்டும். சுதேசப் பற்றுக்குரிய காடுமுரடான தன்மையைப் பரதேச நல னெனும் உளியால் இழைத்து மிருதுவாக்கிக் கொள்ளல் வேண்டும். உலகிலே முதன்மை பெற்றுள்ள நாடுகள் நீதிக்கும் வாய்மைக் கும் கருணைக்கும் கட்டுப்பட்டே தாம் ஒழுகு வதாக அறிக்கை செய்கின்றனர்; ஆனல் அது உண்மையாயின், அன்னார் அக்கொள்கை கட்காகத் தமது சுயநல உரிமைகளையும் பத விகளையும் துறந்து, பிற எளிய நாடுகட்குப் பணிசெய்ய மார்புதட்டிக் கொண்டு முன் வருவான்ரே? உலகத்து முட்டுப்பாடுநேரும் சமயத்தேனும், அவ்வாறு துறக்கும் பரநல தீரர் தற்கால வல்லரசு நாடுகளில் எங்குளர்?

அத்தகைய தீரர் இல்லாது போதற்கும் இரு தக்க காரணங்கள் உள. (1) இம்மைப் பயன்களின் மீதுள்ள வாஞ்சைக்குக் கட்டுப் பட்டே அறவாழ்வு பல நாடுகளிலும் நடை பெற்றுவருகிறது. ஆதலின் அறவாழ்வின் மீதுள்ள அவா சட உலகப் பேறுகளின் மீதெழும் பேராசையினும் வலி குறைந்ததா கிறது. இதனல், அறநெறியும் இம்மைப் பயன்களைப் பெறும் நெறியும் ஒன்ரே டொன்று முரண்படுமாயின், முன்னதை விடப் பின்னதையே அதிக மதிப்புள்ள தாகக் கருதி, அறநெறியைக் கூசாது கை விடவும் பல நாட்டினர் துணிகின்றனர். அர சியல் நெறிக்கு அறநெறி ஆதாரமாகவேண் டும் என்னும் கட்டாயம் அவர்கட்கு இல்லை; அரசியல் நெறிக்குத் தடையாகாவதரை அறநெறியைப் பின்பற்றுவர். இம்மைப் பேறுகளை அடைதற்காக, உலக அமைதியி லும் மெய்ம்மையிலும் நீதியிலும் நாட்ட முடையவர் போலவும் நடிப்பர். அறநெறி யைக் கைக்கொள்ளுவதும் அரசியல் துறை யில் அதிகாரத்தையும் பொருளாதாரத் துறை யில் செல்வத்தையும் பெறுதற்கு அதைச் சாதனமாக்கும் நோக்கத்தோடுதான். புறத்தே உலக அமைதிக்கான முயற்சியும் அகத்தே அதிகார ஆசையும் வேறு சுயநல நோக்கமும் அவர்களிடம் உரம் பெறுகின் றன. தன்னயமற்ற பேச்சோடு அவர்கள் உலக அமைதிக்காகச் செய்யும் ஏற்பாடு போர்க்காலத்துக்குப் புகலாகும் ஒரு சூழ்ச்சி யாகவோ, போரைத் தொடங்குவதற்கு ஒரு காரணமாகவோ முடிகின்றது. இத்தகைய பரிதாப நிலைக்கு மூலகாரணத்தை ஆராய்தல் அறிவுடையார் கடமையாகின்றது. (2) உல கியற் சார்பில் தோய்ந்த நோக்கே, மன நிலையே, அறவுணர்ச்சியைச் சிதைக்கும் அர மாகின்றது. "உலக சம்பந்தமான புகழே வாழ்க்கையின் பயனுகக் கருதப்படும் வரை, உலகப் பொருட்பேறே நாகரிகத்தின் மாண்பை அளக்கும் கோலாகும்வரை, செல் வமும் அதிகாரமுமே ஒருநாட்டின் முன் னேற்றத்திற்குச் சிறந்த அறிகுறிகளாகும் வரை, மனச் சாந்தியைச் செழிப்பினின்றும் வேறுபடாத ஒன்ருகவும், ஆனந்தத்தை ஐம் புல இன்பத்தினின்றும் வேறுபடாத ஒன்ருக வும் கருதும்வரை, அறிவிற்காக அறிவைப் பிரியமொடு நாடலும், உண்மைக்காக உண் மையைப் பிரியமொடு நாடலும், இறைவனை இறைவனுக்காகவே பிரியமொடு நாடலும் இயலாதனவாகும்; பௌதிக விஞ்ஞானமும் கல்வியும் நீதியும் தத்துவமும் சமயமும் அது வரை உலக நலன்களுக்கு அடங்கிக் கட்டுப் பட்டு ஒழுக வேண்டியனவாகும்." உலகத் தின் பொது நிலைமை இங்ஙனம் இருத்தலின், தேசிய வாழ்வில் அதிகாரஞ் செலுத்துவது ராஜ தந்திரமே, ராஜ நீதியுமன்று, ராஜ தர் மமுமன்று; உலக அரசியற் காரியங்களில் அந்தந்த சமயத்துக்கு உதவும் அரச தந்திர முறையே அனைத்தையும் ஆட்டிவைக்கிறது; ராஜ தந்திர நிபுணர்களே தன்னுயிரை ஓம் பாது மன்னுயிரை ஓம்பும் அருளாளராக நடிக்கின்றனர்; உலகத்தைச் செம்மையாக்கு தற்பொருட்டு அவர்கள் எழுதும் பத்திரங் களும், வெளியிடும் பகிரங்க அறிக்கைகளும் பயனற்றனவாய் ஒழிகின்றன.

ஆக, தற்கால உலக அரசியல் முறைகளை ஆராயுங்கால், உலக அமைதிக்குச சாதன மாகும் அம்சங்கள் அவற்றில் இல்லையென் பது வெளிப்படை.

அகநோக்கு அளிக்கும் அறமொழிகள்

E. V. சோமசுந்தரம், B. A.

ஆறுதல் அனைத்தும் அற்ற நிலை

1. இறைவன் அளிக்கும் ஆறுதல் இருக் கும்போது மற்ற உலக ஆறுதல்கள் முதலிய வற்றைத் துச்சம் எனக் கருதல் பெரிய காரி யம் அன்று.

இறைவன் அருளும் ஆறுதலும் உலக ஆறு தலும் அற்று இருக்கத் திறமை பெறுதல் மிக மிகப் பெரிய நிலை. இறைவனது பெரு மைக்காக மனமகிழ்வுடன் எவ்வித ஆறுதலு மற்ற நிலையைப் பொறுத்தல் அரிது. தன்

பெருமையையும் சிறப்பையும் பாராட்டாது இருத்தல் அங்கிலேயில் அரிய செயல்.

இறைவன் அருளைப் பெறும் போது நீ மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் இருத்தல் பெரிய காரியம் அல்ல. அந்த இனிய காலத்தை மனிதர் அனைவருமே விரும்புகின்றனர்கள்.

இறை அருளால் தாக்கப்படுகிறவன் இனிமையாக எளிதாக வாழ்க்கைப் பிரயாணத்தை நடத்துகிறான்.

எல்லாம்வல்ல இறைவனது அருளில் நிற்பவனும் இறைவனாகிய தனிப்பெரும்வழிகாட்டியின் பின்செல்பவனும் தனது வாழ்க்கைப் பாரத்தை உணராது இருத்தல் என்ன விந்தை?

2. நமது மன ஆறுதலுக்காக எதையேனும்.வைத்திருக்க நமக்கு எப்போதும் விருப்பம் உண்டு. தன்னையே தான் பறித்துக் கொள்ளுதல் எவனுக்கும் கஷ்டந்தான்.

ஒரு பெரியார் தமது சீடருடன் உலகை வென்றார். அவ் வெற்றியைப் பெறும் பொருட்டு உலகில் எவையெவை இன்பமானவையோ அவற்றைஎலலாம் துச்சமெனத் தள்ளினார். இறைவனது அன்பிற்காகத் தமக்கு மிகநெருங்கிய அன்பரையும் விட்டுத் பிரிவதற்குப் பொறுமையுடன் இசைந்தார்.

தம்மைத் தோற்றுவித்த இறைவன்பாலுள்ள அன்பினால் மனிதர் மேல் உள்ள அன்பை வென்றார். மனித ஆறுதலைவிட்டு இறைவனுக்கு உவப்பானதையே கைக் கொண்டார்.

அவ்விதமே நீ இறைவன்பால் உள்ள அன்பிற்காக உனக்கு மிகநெருங்கிய பிரியமான நண்பர்களையும் விட்டுப் பிரிந்துவிடக் கற்றுக் கொள்.

நண்பர்களால் கை விடப்படும் போதும் அதற்காக வருந்தாதே. ஏனெனில் நாம் அனைவரும் முடிவில் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்துபோக வேண்டியவர்களே யல்லவா?

3. தன்னைத்தானே முழுதும் அடக்கிஆள்வதற்கும், தனது முழு மனதையும் இறைவன்பால் இழுத்துநிலை நாட்டுவதற்கும் கற்றுக் கொள்ளுமுன், ஒரு மனிதன் தனக்குள்ளாகவே நீண்ட காலம், பலமான போராட்டம் கட்டாயம் நிகழ்த்த வேண்டிஇருக்கிறது.

தன்னைத் தானே நம்பி இருந்தானானால் ஒரு மனிதன் எளிதில் உலக மனித சுகங்களைத் துய்த்தலில் விழுந்துவிடுகிறான்.

ஆனால் உண்மையாக இறைவனை நேசிப்பவனும், எல்லா நற்பண்புகளிலும் பற்றுடன் இருக்கத் துடிப்பவனும் வாழ்க்கை வசதிகளையோ, உடல் இன்பங்களையோ நாடிவிழுவதில்லை. அவன் இறைவனுக்காகக் கடினமான முயற்சிகளிலும் கண்டிப்பான பயிற்சிகளிலும் இடைவிடாது ஈடுபட்டு இருப்பதையே கைக் கொள்வான்.

4. ஆதலால் எப்போது ஆன்மீக ஆறுதல் இறைவனிடம் இருந்து உனக்கு அளிக்கப்படுகிறதோ அப்போது நன்றியுடன் பெற்றுக் கொள். ஆனால் அது உன்னுடைய தகுதியால் பெற்றதல்ல, அது இறைவனது பேருளினால் தான் அளிக்கப் பட்டுள்ளது என்பதைத் தெளிவாக நினைவில் வை.

அப்படி அருள் பெறும் போது கர்வமடையாதே; அளவுக்கு மீறி ஆனந்தங் கொள்ளாதே; தற்பெருமையுடன் பெருமிதம் கொள்ளாதே. அதற்கு மாறாக அவ்வருள் கிடைத்ததற்காக மிகப் பணிவுடன் இரு; நீ செய்யும் காரியங்கள் அனைத்திலும் இறை அச்சத்துடனும் மிக்க கவனத்துடனும் இரு. ஏனெனில் அவ்வருள் பொழியும் நேரம் ஓடிவிடும்; பின்பு தீமையின் கவர்ச்சி எழுந்து துன்புறுத்தும்.

இறை அருளால் பெற்ற ஆறுதல் உன்னிடம் இருந்து எடுக்கப் பட்டால், உடனே மனம் உடைந்து மயங்காதே. ஆனால் பணிவுடனும், பொறுமையுடனும் மீண்டும் அத் தெய்வீக அருள் உன்னிடம் வருவதற்காகக் காத்திரு ஏனெனில் இறைவன் மீண்டும் திரும்ப உனக்கு மிகுதியான ஆறுதலை அளிக்கும் திறமையுடையவன்.

அப்படி இறை அருளைப் பெறுவதும் இழப்பதும் இறைவனை நாடும் வாழ்க்கையில் அனுபவமுடையார்க்குப் புதிதோ, அதிசயமோ அன்று. ஏனெனில் பெரிய சாதுக்களும், பண்டைப் பெரியார்களும் மகாத்மாக்களும் கூட அடிக்கடி இத்தகைய மாறுதல்களுள்ள அனுபவத்தையே பெற்றிருந்தார்கள்.

5. அப்படி அடிக்கடி மாறி மாறி வருகின்றமையால், இறை அருளின் இன்பத்தை நுகர்ந்துகொண்டிருந்த ஒருபெரியார் 'அருள் பெற்றிருந்த நற்காலத்திலே நான் ஒருக்காலும் மனக் கலக்கமடைய மாட்டேன் என்றேன்' என்று கூறினார்.

ஆனால் அருள் அற்ற நிலைமை அடைந்த போது அவர் 'அந்தோ! ஆண்டவனே நீ உனது திருமுகத்தை(அருளின்றி)த் திருப்பிக்

கொண்டாயே! நான் துன்பத்தில் திகைக்கின்றேனே!' என்று கதறினர்.

ஆயினும் இப் பலவித அனுபவங்கட்கு இடையேயும், அவர் ஒருவகையிலும் மனம் ஒடிந்துபோகவில்லை. ஆனல் மேலும்மேலும் மிகக் கனிவுடனும் ஆர்வத்துடனும் இறைவனை இவ்வாறு வேண்டினர் :

"ஓ இறைவனே! உன்னிடமே நான் கதறுவேன்! உன்னை நோக்கியே பிரார்த்திப்பேன்" என்று அவர் இடைவிடாது கெஞ்சுவார்.

முடிவில் அப்பிரார்த்தனையின் பயன் பெறுவர். அருள் பெற்றதைப் பற்றி அவர் கூறுவது — 'இறைவன் இன்னருள் கூர்ந்து என் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்தார், என்மேல் கருணை கூர்ந்தார்; இறைவன் எனது உறுதுணை ஆகி இருக்கிறர்'—என்று, ஆனல் எவ்விதம்? "எனது கவலையைக் குதூகலமாக்கினய். என்னைப் பேரின்ப வெள்ளத்திலே மூழ்கடித்தாய், இறைவனே!' என்று ஆச்சரியத்துடன் கூறுவார்.

மிகத் தூய சாதுக்களே இவ்வித மாறுதல்களுள்ள அனுபவங்களைப்பெற்று வருந்தினர்கள் என்ருல் அறவழியிலே (மிகத்துர்ப்பலரான) ஆற்றலற்ற அருள் செய்வதிலே மிக வறிஞரான நம் போலியர், சில சமயம் இறையின் பால் ஆர்வத்துடனும், மற்ற சில நேரம் அசட்டையாகவும் இருப்பதற்காக மனம் ஒடிந்து முயற்சியைக் கைவிடலாமோ? இறைவன் திருவுளப் படியே இறை அருள் வரும், போகும். இதைப்பற்றி ஒரு ஆன்மீகப் பெரியார் 'ஓ இறைவனே! நீ ஒருவற்கு அதி காலையில் அருள் அளித்து, திடீர் என்று பின்னர்ச் சோதனையில் அவனைச் சிக்க வைக்கிறீர்!" என்று கூவுகிருர்.

6. இப்படிப்பட்ட நிலையில் இறைவனது பெருங்கருணையைத் தவிர வேறு எதில் நம்பிக்கை வைப்பேன்? வேறு எதை எதிர்பார்த்திருப்பது! தெய்வீக அருள் ஒன்றைத் தவிர வேறு எதிலும் நம்பிக்கை கொள்வதற்கில்லை.

என்னைச் சுற்றி நல்லோர் சூழ்ந்திருக்கலாம். அவர்கள் ஆன்மிக ஆர்வமுள்ளவர்களாக இருந்தாலும் சரி, நம்பிக்கை உள்ள நல்லோராயினும் சரி; ஆண்டவனைப்பற்றிய அருள் நூல்களோ மிகச் சிறந்த கட்டுரைகளோ, இனிய பிரார்த்தனைக் கீதங்களோ தோத்திர கீதங்களோ - எவை இருப்பினும் சரி, இறைஅருள் என்னைவிட்டு நீங்குமானல், அருளற்ற என் வறிய நிலையில் விடப்படுவேனயின் மேற்கூறியவை அனைத்தும் பயனில்லை; அவை ருசிப்பதும் இல்லை.

அத்தகைய அருளற்றநிலையிலே பொறுமையுடன் இருப்பதைத் தவிர வேறு வழியில்லை; ஆணவத்தை அறவே ஒழித்து, 'இறைவன் திருவுளப்படியாகுக' எனக் காத்திருத்தலே வேண்டும்.

7. சில சமயங்களிலாவது ஆண்டவனது அருளை இழந்து ஆன்மீக ஆர்வம் குறைந்து வருந்தாத அவ்வளவு தெய்வீக அருளுடைய பக்தனையோ, ஆன்மீகச் சாதுவையோ நான் கண்டதே இல்லை.

முதலிலோ முடிவிலோ தீமைக்கவர்ச்சியில் இடர்ப்படாதவாறு தியானத்தில் மூழ்கியிருந்தவரோ ஞான ஒளி பெற்றவரோ ஒரு சாதுவும் இருந்தது கிடையாது. இறைவனுக்காக யாதேனும் ஒரு துயரத்தின் மூலம் பயிற்சி பெற்றிராத எவனும் இறைவனைப் பற்றிய உயர்ந்த தியானத்தில் அமரத் தகுதியற்றவனகான்.

முன்னல் தீமைக் கவர்ச்சிகளால் துன்புறுத்தப் படுவதே பின்னர் இறையருளால் ஆறுதலைப் பெறுவோம் என்பதற்கு அறிகுறியாம்.

தீமைக் கவர்ச்சிகளால் தீண்டப்பட்டு அவைகளை எதிர்த்துப் போராடி வென்றவர்களுக்கே தெய்விகஆறுதல் கிடைப்பது திண்ணம். 'தீமைகளை வென்றவனுக்கு வாழ்க்கைத் தருவின் கனியை உண்ணக் கொடுத்து நித்தியானந்தத்தை நல்குவேன்' என்பது இறைவன் திருவாக்கு.

8. மனிதன் துன்பங்களையும் தொந்தரவுகளையும் தீரத்தொடு தாங்கும் திறமை பெறுதற்காகவே அவனுக்குத் தெய்விக ஆறுதல் அளிக்கப் படுகின்றது.

அப்படி ஆறுதலைப் பெற்றதும் தனது தூய்மைப் பெருமையில் பெருமிதம் கொள்ளாதிருக்க, அடுத்தபடியாக தீமைக் கவர்ச்சியும் தடைகளும் தோன்றிவிடுகின்றன.

(சாத்தான்) தீமைச் சக்தி தூங்குவதில்லை. ஊனுடலும் இன்னும் மடிந்துவிடவில்லை. ஆதலால் அவைகளை எதிர்த்துப் போரிடத் தயாராவதை நிறுத்தாதே. ஏனெனில் உன் இடப்பக்கமும் வலப்பக்கமும் எங்கு பார்க்கினும் ஓய்வு கொள்ளாத எதிரிகள் சூழ்ந்து எப்போது ஏமாறுவாய் என்று காத்துக் கொண்டிருக்கிறர்கள்.

இந்துமத ஸாரம்

(75-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியாயம்—19

ஜீவன் (ஆன்மா)

ஓர் உயிர்

முந்திய அத்தியாயங்களில் வேறு பொருள்களைப் பற்றிப் பேசும்போது பலமுறை 'ஜீவன்' என்ற மொழியைச் சந்தித்துள்ளோம். அம்மொழி இன்னதைக் குறிக்கின்றது என்பதை ஓர் அளவிற்கு முன்னரே நாம் அறிந்துளோம். இனி முன்னினும் விவரமாக ஆராய்வாம்.

'ஜீவன்' என்பதன் பதப்பொருள் 'ஓர் உயிருடைய பொருள்' என்பது. இயற்கையிலே உயிரைப் பெற்றுள்ள பொருள் யாதும், விரிந்த பொருள் கொள்ளுமிடத்து, 'ஜீவன்' என்று அழைக்கப்படும். உயிருடைய பொருள்கட்கு உறைவிடமாவது இயற்கை என்னும் இந்துமதக் கருத்து ஒருவாறு விரிவுடையதேயாகும். ஜீவர்கள் உயிரொடு வாழ்வதற்காகத் தூலமும் சூக்குமமுமான பல உலகங்கள் உள்ளன. உதாரணமாக, ஒரு ஜீவன் மிகச் சிறு நுண்ணுயிராகவோ, செடியாகவோ, விலங்காகவோ, மனிதனாகவோ தேவதையாகவோ இருக்கலாம். மிகவுயர்ந்த தேவதையாகிய இரணிய கர்ப்பரும், யாம் முன் கூறியுள்ளபடியே ஒரு ஜீவராவார். படைப்பிலுள்ள எல்லா ஜீவர்களையும் குறிப்பிடும்போது, இந்து சாஸ்திரங்கள் உபயோகிக்கும் ஒரு சாதாரண சொற்றொடராவது ''பிரம்மா முதலாகப் புல் ஈருக'' என்பது (ஆப்பிரம்ம ஸ்தம்பபரியந்தம்.) உண்மையாகவே, பற்பல உலகங்கள் அடங்கிய பிரம்மாண்டம் எண்ணற்ற வகைப்பட்ட உயிர்கட்கு உறைவிடமாகவே கருதப்படுகிறது.

ஜீவர்கள் 'சரம்' (இயங்குவன) ஆகவோ அசரம் (நிலையாயிருப்பன) ஆகவோ இருக்கலாகும். இந்து இருடியரது முடிபின்படி சரமோ, அசரமோ, செடியோ, விலங்கோ தேவதையோ எதுவாயினும், ஒவ்வொரு ஜீவனும் அறிவுடைய பொருளேயாகும். உயிருள்ள பொருள் எதுவும் அறிவையும் பெற்றுள்ளதேயாகும். ஒரு செடிக்கும் ஒரு விலங்கிற்கும் உள்ளவேறுபாடிருப்பது அவை பெற்றுள்ள அறிவின் அளவிலேயாகும். ஒவ்வொரு ஜீவனும் ஓர் அறிவுடைய (உணர்வுடைய) பொருளே, சுகதுக்க வேதனைகட்கு உட்பட்டதாகும். அது போக்தாவும், கருத்தாவும் ஆகும். இவையே ஒரு ஜீவனின் சிறப்பான இயல்புகளாம்; இவற்றோடு இப்பிரபஞ்சம் எனும் முழுயந்திரமும் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத முறையிலே தொடர்புற்றுள்ளது.

ஒரு ஜீவனது செயல் அதன் அனுபவத்தோடு கருமமென்னும் கடுமையான நியதியினால் பிணைக்கப்பட்டிருப்பதை நாம் கண்டுள்ளோம். சுகவடிவமாகவோ, துக்கவடிவமாகவோ ஒரு ஜீவன் அனுபவிக்க வேண்டியிருப்பது, முன்னைய பிறவிகளில் அது செய்துள்ள சொந்தச் செயல்கள் சிலவற்றின் நிச்சயமான பயனேயாகும். தமது வினைகளின் பயன்களை நுகர்வதற்கே அவை மீண்டும் மீண்டும் பிறக்கின்றன. பிரளய காலத்தும் ஜீவர்கள் ஒடுங்கிய நிலையிலே இருப்பன; அவற்றின் பழையவினைகளின் பயன் விளைதற்காகவே ஒரு புதிய சிருஷ்டி நிகழ்வதும், பிரபஞ்சமும் படைக்கப்படுவதும். ஜீவர்களே நடன அரங்கத்தின் நடுவே உண்மையாக வீற்றிருக்கின்றனர்; இயற்கையிலுள்ளனைய யாவும் அவற்றின் செயலுக்கும் அனுபவத்திற்கும் என்றே அமைந்துள்ளன.

ஜீவர்கள் ஒருவர்க்கொருவர் வேறுபடுவது பெயர்களிலும் உருவங்களிலும் மட்டுமல்ல; அறிவாற்றலிலும் செயலையாற்றும் திறனிலும் அவர்கள் வேறுபடுவர். அவர்கட்குள் வேறு உயர்வற உயர்ந்த ஜீவராகிய இரணிய கர்ப்பர்க்குரிய இத்திறனே எல்லையற்றதாகின்றது; ஆனால் மிகச்சிறு நுண்ணுயிரின் திறனே அணுவளவானது என்று நன்கு கூறலாகும். வரையறைக் குட்பட்ட அறிவுத் திறனைப் பெற்றுள்ள மனிதனும் மிகச்சிறு நுண்ணுயிரோடு ஒப்பிடும் போது அத்திறன்களைப்பற்றிய வரையில், அதனினும் அளவு கடந்த மேன்மையுள்ளவனாகவே தோன்றுகிறான். இந்நிலவுலகிலே ஒருமனிதனுக்கும் ஒரு மிகச்சிறிய நுண்ணுயிர்க்கும் இடையேயுள்ள அளத்தற்கரிய தூரத்தைக் கணக்கற்ற பலவகை ஜீவர்கள் நிரப்பி வருவதாக உண்மையிற்காணப்படுகின்றனர். அதுபோன்றே ஒரு மனிதனுக்கும் இரணிய கர்ப்பர்க்கும் (பிரம்மாவிற்கும்) இடையிலுள்ள தொலையும் அளவற்றதாதலின், அதனையும் கணக்கற்ற பலவகை ஜீவர்கள் நிரப்பி வருதலும் நிகழக்கூடிய ஒன்று தானே. உண்மை அதுவே என்பது இந்து சாஸ்திரங்களின் கொள்கை; இவ்வுலகிற்கு வெளியே மனி

தரை விஞ்சிய உயிர்கள் பலப்பல படிகளில் வாழ்கின்றனர்.

இதிலே அறிவிற்குப் பொருத்தமற்றது யாதொன்றுமில்லை. சாஸ்திரங்களின் முடிவுகள் உண்மையாகவே உற்று நோக்கிக் கண்டவற்றையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. நாம் அத்தகைய உயிர்களைச் சாதாரணமாகக் காண்பதில்லைஎன்பது அவற்றின் இருப்பைப் பொய்யாக்கும் சான்ருகாது. நச்சுயிரையும் (நோயை உண்டாக்கும் நுண்ணிய சிற்றுயிரையும்) நாம் கண்ணுற் காண்பதில்லை; ஆனுலும் அந்த நச்சுயிரின் இருப்பு கதையன்று. ஏனெனில் வடிவை நூற்றுக் கணக்காகப் பெருக்கிக்காட்டும் ஒரு கண்ணுடி வழியாக நோக்கி அதைக்காணல் நமக்கு இயலும். அதுபோன்றே மனிதர்க்கு மேற்படிகளிலுள்ள இவ்வுயிர்களையும் யோகக் காட்சியால் நாம் நேரே காணக்கூடும். அக் கண்ணுடியைத் தயாரித்தற்காகப் பாடு படுதல் நமக்கு அவசியமாதல்போல, திறமை வாய்ந்த தெளிந்த யோகக்காட்சியை உண்டு பண்ணுதற்கும் முயற்சியை நாம் கைக் கொள்ள வேண்டும். ஆயினும், இவ்வுயிர்களின் இருப்பைப் பற்றிய உண்மை அத்தகைய காட்சியைப் பொறுத்து நிற்பதாதலின் கட்டுக்கதையன்று.

மனிதனுக்கும் பிரம்மாவுக்கும் இடையே பல படிகளிலே வாழும் இந்த ஜீவர்கள் இந்நிலவுலக மல்லாத பல வகைப்பட்ட உலகங்களை உறைவிடமாகக் கொண்டுள்ளனர். இவ்வுலகங்கள் ஒவ்வொன்றிலும் உறைபவர் தமக்கெனத் தனியாக ஒரு பொதுப்பெயர் கொண்ட ஒரு வகுப்பினராவார். இந்துமத சாஸ்திரங்களிற் கூறப்படும் சில வகுப்பினர் ஆவார், யக்ஷரும், ஸாத்யரும், கின்னரரும், கந்தருவரும், தேவரும்; கடைசி இரண்டு வகுப்பினர்க்குட் சிறப்பாக(மற்றவகுப்பினர்க்குப் பொதுவாகவும்) தனித்தனி உலகிலே வாழும் வெவ்வேறு உட்பிரிவினரும் உளர் என்று கூறப்படுகின்றது. ஆயினும் மனிதரை விஞ்சிய ஜீவர்களைப் பற்றிய அட்டவணை சில பெயர்களை மட்டும் குறிப்பதன்றி எல்லாப் பிரிவினரின் பெயர்களையும் குறிப்பதன்று என்றே தோன்றுகிறது.

இந்த ஜீவர்கட்கு உறைவிடமாகும் பற்பல உலகங்களைப் பற்றிய அட்டவணையிலும் இதுவே உண்மையெனத் தோன்றுகிறது. பிருத்வி யென்னும் இவ்வுலகம் நடுவேயிருப்பதாகவும், இதற்கு மேலும் கீழும் இன்னும் பல உலகங்கள் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. முறையே சுவர்க்கம், மத்தியம், பாதாளம் எனும் பெயர்பெறும் மேல், நடு, கீழ் எனும் மூவகையுலகங்களும் அடங்கிய பிரம்மாண்டமும் திரிபுவனம் (மூவுலகம்) எனும் பெயராற் குறிப்பிடப் படுகின்றது. ஆயினும், இன்னும் விவரமாகக்கூறும் அட்டவணையில் பதினுன்கு உலகங்கள் (சதுர்தச புவனனி) கூறப்படுகின்றன. நாம் வாழும் உலகிலிருந்து மேலேபூ,புவர், சுவர், சன, மஹ, தப, ஸத்ய எனும் ஏழுவகை உலகங்களும், அதற்குக்கீழே அதல விதல சுதல ரசாதல தாாதல, மஹாதல, பாதாள, உலகங்களாகிய ஏழும் உள்ளன. (ஒப்பிடுக: வேதாந்த ஸாரம் 104) ஓர் உபநிடதத்தில் அக்னி லோகம், வாயு லோகம், வர்ணலோகம், ஆதித்யலோகம், இந்திரலோகம், பிரஜாபதி லோகம், பிரம்ம லோகம் என்பவை மேல் ஏழு உலகங்களாகக் கூறப்பட்டுள்ளன. (ஒப்பிடுக: கௌஷீதகி உபநிஷத்-I-3). முந்திய அட்டவணையிற்கூறப்பட்டுள்ளவையும் இவையும் பொருந்தவில்லையாதலின் வேருனபிற உலகங்களைக் குறிப்பதாகக் கொள்ளல் வேண்டும். இது எவ்வாருயினும் இரண்டு அட்டவணைகளிலுமுள்ள உயர்ந்த உலகங்களாகிய சத்திய லோகமும் பிரம்மலோகமும் ஒன்றேயாம். சில சமயங்களில் மேலுலகங்கள் எல்லாம் பிதுர்லோகம் தேவலோகம் பிரம்மலோகம் எனும் முப்பிரிவுகளுள் அடக்கப்படும். இந்த அட்டவணைகளில் எதுவும் முடிவாகக் கூறுவதாகத் தோன்றவில்லை; பிரம்மாண்டத்தில் பலப் பல உட்பிரிவுகள் இருப்பதையும் அவற்றுள் முக்கியமான சிலவே கூறப்பட்டுள்ளன என்பதையும் ஒவ்வொன்றும் குறிப்பாகக் காட்டுவதாத் தெரிகின்றது.

(தொடரும்)

"இப்போது செய்வதையே செய், இப்போது துயருறுகிறபடியே துயரமடை; இதையெல்லாம் ஞான நிலையினின்று செய்தற்கு, உனது நெஞ்சைத் தவிர வேறென்றையும் மாற்றவேண்டாம். இறைவனது ஆணையால் நமக்கு நேர்வதை நாம் ஏற்று, அவ்வாறே நடக்கட்டும் என்று நம் சங்கற்பத்தை இசைவிப்பதில்தான் ஞானம் அடங்கியுள்ளது."

— ஒரு மேற்றிசை ஞானியார்

தேவியருள் விலாசம் என்னும் இன்பமாலை

(நாவலர் இயற்றியது)

நூன்முகம்

ஒரு நூலைப் பெருமைப் படுத்துவதன் பொருட்டுத் தெய்விகமான வரலாறுகளை அதனொடு சார்த்திக் கூறுவது பெரும்பாலும் வடமொழியாளரது இயல்பு. சங்கர பகவத் பாதாசாரியரால் இயற்றப்பட்டதாகக் கூறப் படும் சௌந்தரிய லகரியைக் குறித்தும் அத் தமையதோர் வரலாறு கூறப்படுகின்றது. புலவர்கள் நூலின் உண்மைப்பெருமையையே கருதுவராதலால், அத்தகைய வரலாறுகள் கல்லாதவரையே கவர்வனவாம்.

தெய்விகப் பெருமை கூறுதிருப்பினும், சௌந்தர்யலகரி எழுத்துச் சொற்பொருள் யாப்பு அணிகளால் சிறந்து விளங்குவதொரு நூலாம் என்பதற்கும் ஐயமில்லை. அந்நூற் சிறப்பு நோக்கி அத்தகையதொரு தனி நூல் தமிழ்க்கும் வேண்டுமென்பதை நெடுநாள் நினைத்ததன் பயனாக இந்நூல் வெளிவரலா யிற்று. இடையறாத முயற்சியால் ஒவ்வொரு சொல்லுந் தகுந்ததொரு பொருளைப் பயக்க வேண்டும் என்றும் கருத்துடன், தேவி பூஜை நிகழ்ச்சிக்கண் இதை யான் இயற்றியதன்றி வேறு எத்தகைய தெய்விகப் பெருமையும் இதற்கு இல்லை.

சௌந்தர்ய லகரியை வீரைக் கவிராஜ பண்டிதர் என்பார் தமிழில் பெயர்த்தார். அதற்குச் சைவ எல்லப்ப நாவலர் செய்த உரை ஒன்று உள்ளது. அந்நூலையும் உரை யையும் பற்றிய குறிப்புக்களை யான் எழுதிய 'சௌந்தர்ய லகரி ஆராய்ச்சி' யிற் காணலா கும். அந்நூலும் உரையும் தம் அளவிற் சிறந்தனவேயாம் என்பதை மறுக்க இய லாது.

இந்நூல் மொழிபெயர்ப்பு நூலன்று. சௌந்தர்ய லகரிக் கருத்துக்கள் சிலவற்றை நயம்பற்றி மறுத்திருப்பதை இதிற் காணலா கும். எல்லாராலும் தழுவப்படும் பொதுக் கருத்துக்கள் இருநூற்கும் பொதுவாவனவே யாம்.

சௌந்தர்ய லகரியில் தேவியின் இன்பப் பெருக்கைக் கூறும் பகுதியை 'ஆனந்த லகரி' என்றும், அழகின் பெருகைக் கூறும் பகுதி யைச் 'சௌந்தர்ய லகரி' யென்றும் கூறு வர். தேவியின் இன்ப நிலையையும் மேன்மை யையும் தேவியாற் பெறப்படும் இன்ப நிலை யையும் குறித்த கருத்துக்களை உடைமையால் இதற்கு 'இன்ப மாலை' எனச் சிறப்புப் பெயர் புனையப்பட்டது.

சிறிது கற்றார்க்கும் எளிதில் விளங்கும் பொருட்டு இதற்கு ஒரு பொழிப்பெழுதுதல் இன்றியமையாததாயிற்று. விரிவுரை புல வர்க்கே பெரிதும் பயன்படுவதனால், அவர் கள் அடியொற்றி ஆராய்ந்தறிந்து கொள்வர் என்பது கருதி, முதற் செய்யுட்கு மட்டும் விருத்தி எழுதினேன். புலவர்களின் திட்ப மான கல்விக்கும் நுட்பமான அறிவுக்கும் அஞ்சிப் பிறிது யாதுங்கூற விழைகின்றி லேன்.

இந்நூற்கு உயர்திரு பரமாத்மாநந்த சுவா மிகள் 'தேவியருள் விளக்கம்' என்று ஒரு பெயர்கூட அருளினார்கள். அது இந்நூலின் நோக்கத்தைச் செவ்விதிற புலப்படுத்துகின் றது. நன்கு புலனாகா இடங்களில் அவர்கள் இடத்துக்கேற்பக் குறிப்புப் பொருள்களும் எழுதி அருளினர். அவர்களது பேருட் பெற்றிமைக்கு எந்நாளும் மறவாத நன்றி செலுத்துங் கடப்பாடு உடையேன்.

இங்ஙனம்,

நூலாசிரியன்

பாயிரம்

'ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்' ஆசிரியர் இயற்றியது

சந்தநயஞ் செவியாரத் தண்டமிழின் மொழி
யின்பந் தனைநா வாரச்
சிந்தனையி விருமொழியிற் றிகழ்கலைக ளாய்ந்
துணர்ந்த செம்பொ ருட்சீர்
தந்தநய மறிவாரச் சண்டிகைபாற் செழுங்
காதல் தனிநெஞ் சார
எந்தநய முந்ததும்ப விருந்தமிழிவி லிசைத்
ததுவோ 'இன்ப மாலை''.
ஆவியினுக் காராத வமுதின்ப மருள்பரை
யின் அரவிந் தத்தாள்
பாவியரும் பணிந்தேத்திப் பகர்வரிய பேரின்
பப் பயனே காண்பான்
நாவியல்செந் தமிழார்ய நற்புலவன் மான்
முருக நாவலன்றான்
'தேவியருள் விலாச'மெனுஞ் சீர்மல்கு நூலி
தனைச் செய்தான் மன்னோ.

நாம் விதிக்கு அடிமையா?

(ஸ்ரீ சுவாமி யதீஸ்வரானந்தர் எழுதியதன் மொழிபெயர்ப்பு)

(83-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை கூறியது விதியைப்பற்றி ; இனி நம்மைப்பற்றிக் கவனிப்போம். நாம் யார்? நம்மிடத்துள்ள உண்மையான மனிதனைப் பற்றிச் சிறிதேனும் நாம் அறிய முயற்சிப் போம். மனிதனது இயல்பைப் பற்றிப் பற் பல கொள்கைகள் உள்ளன. உயர்ந்த முறை யிலே ஒழுங்கான அமைப்புப் பெற்ற நுண் ணிய உயிர்க்கூடுகளின் (Cells) சேர்க்கையி னும் மிக்க ஒரு பொருளல்லன் மனிதன் எனவும், அவனது மனம் அவனது மூளையின் தொழிலால் விளையும் ஒன்று எனவும், சட வாதிகள் கூறுகின்றனர். மனிதனிடத்து நிலையாயிருப்பது யாதொன்றும் இல்லை; அவன் பிறக்கிறான், உணவை உடலோடு ஒன்றாக்கிக் கொள்ளுகிறான், இறக்கிறான்; மனிதனிடத்துள்ள யாவும் மரணத்தோடு முடிகின்றன. இது உண்மையாயின், மனி தன் உயிர்க்கூடுகளின் சேர்க்கையினும் பெரிய பொருள் யாதொன்றும் அல்லன் எனின், இயல்பாகவே இயற்கையின் கை வசப்பட்ட ஒரு விளையாட்டுக் கருவியே அவ னுவான்.

அதுபோல, படைப்புக்கு வெளியே அமர்ந் துள்ள ஒரு கடவுளால் சூனியத்தினின்றும் உண்டாக்கப்படும் ஒரு பிராணி அதைப் படைத்தவரது இரக்கத்திற்கு உட்பட்டது என்பது நிச்சயம்; அவர் அவனை சுவர்க்கத் திற்கோ நரகத்திற்கோ வேறு உலகிற்கோ அனுப்பலாம்; இல்லையேல், அவனை எதனின் றும் உண்டாக்கினரோ அந்த சூனியத் திற்கே அவனை மீண்டும் ஏகச்செய்து, அவனை முற்றும் அழித்தும் விடலாம்.

ஆனால், இதற்குமாறாக மனிதன் ஓர் ஆன்மா வாகில், அவன் தனது ஆன்ம இயல்பை உண ருவதால் அவன் தனது விதியை அடக்கக் கூடும். உபநிடதங்களின் போதனைப்படி, ஆன்மா அஞ்ஞானத்தால் தனது தெய்விக இயல்பை மறக்கிறது, தன்னை மனத்தொடும் இந்திரியங்களோடும் உடலோடும் ஒன்று படுத்திக்கொண்டு கட்டுக்கு உட்படுகின்றது. நாம் எல்லாவித வேற்றுமைகளோடும் பிறந் துள்ளோம். நாம் எல்லோரும் சமமாகப் பிறந்துள்ளோமா? நாம் அனைவரும் சமமான அளவிற்கு உள்ளடங்கிய சக்திகளை உடை யோமா? நமது வேறுபாடுகள் நமது உடலி லும், நமது மனங்களிலும் நமது நினைவுகளி லும் உள்ளன. இவையெல்லாம் ஆன்மா விற்கு முற்றிலும் வேறுபட்டன. மனிதர் கட்குட் காணப்படும் வேறுபாடுகட்குக் கார ணம், உயிர்க் கூடுகளிலும் பெற்றோர்களிட மிருந்து பிறவியிலே பெற்றவைகளிலும் அமைந்துள்ள வேறுபாடுகளே என்று கூற வும், நமது பழக்கங்களும் சுபாவங்களும் நினைவுகளும் அனைத்தும் நமது முன்னோரிட மிருந்து பெற்றவை என்று கருதவும், சில விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர். இது அவ்வளவு திருப்திகரமான கொள்கையன்று என முடிபு கட்டப்பட்டுள்ளது: காரணம் யாதெனின், ஒரு கிறிஸ்து ஒரு புத்தர் ஒரு ஷேக்ஸ்பியர் ஒரு மோஸார்ட்—இவர்களின் மேதாவித் தன்மை அவரவர்களின் பெற்றோ ரிடமிருந்தே பெறப்பட்டது என்பதை ஒரு புத்திமான் ஒப்புக்கொள்ளமாட்டான் என் பதே.

இக் கொள்கை திருப்திகரமானதாயில்லை என்பதை உணர்ந்தே ஓர் உயிர் நூல் நிபுணர் கருவேறுபாடு எனும் கொள்கையை வெளி யிட்டார்; அதன்படி, பெற்றோர்களிடம் இல் லாத பழக்கங்களும் சார்புகளும் வழி வந்த வர்களிடம் தோன்றுகின்றன. இப் பழக்கங் களும் சார்புகளும் கருமூலத்திலே உள்ளடங் கிய நிலையிலே அமைந்துள்ளன என்றும், ஒவ் வொரு கருமூலத்திற்கும் வேறொரு கருமூலத் திற்கும் உள்ளடங்கிய சக்தியிலே வேறுபாடு ஓரளவிற்குக் காணப்படுகிறது என்றும் அவர் கருதுகிறார். ஆனால் எந்தவிஞ்ஞானியா லும் பதிலுரைக்க வொண்ணாத இப்பெருங் கேள்வியொன்று எழுகின்றது; கரு மூலத் தில் அமையும் உள்ளடங்கிய சார்பு எங்கி ருந்து தோன்றுகிறது? இதற்குத் திருப்திகர மான பதிலளிக்கக் கூடியவர் மறுபிறவியில் நம்பிக்கையுடையவர்களே யாவார்.

ஆன்மா தனக்குத்தானே முன்னோன் ஆகி றது. ஆன்மா தனது பழைய சேர்க்கை களோடும் பண்டைய அனுபவங்களின்றும் விளைந்த வாசனைகளோடும் பலன்களோடும் கூடி, பிறவியிலே சம்பந்தப்படுகிறது. ஆன்மா தன்னை மனத்தோடும் இந்திரியங்க ளோடும் உடலோடும் ஒன்றுபடுத்திக் கொள் ளும்போது போக்தா ஆகிறானென்ற போத னையை உபநிடதங்கள் நமக்கு அளிக்கின் றன. பகவத் கீதையிலே ஸ்ரீ கிருஷ்ண பக வான் மனித ஆன்மாவிற்கு ஒரு பெரும் மகி மையை அளிக்கிறார், அது பரம்பொருளின் அழியாத ஓர் அம்சம் என்று கூறுகிறார். அறியாமையாலே தனிக்கூறாகிய அது மன

தோடும் இந்திரியங்களோடும் தன்னை ஒன்றுபடுத்திக் கொள்கிறது. இதுவே மனிதனது சூக்கும உடலாகின்றது; இது தூல உடலினின்றும் பிரிவடைகின்றபோது, நாம் அந்நிகழ்ச்சியை மரணம் என்றழைக்கிறோம். ஆனால் 'இறக்கிறவன்' எவனோ அவன் தொடர்ந்து பின்னும் இருக்கின்றவனே; அவனே மீண்டும் பிறக்கிறான். இவ்வாறு போக்கும் வரவும் அமையினும், அழியாத பரம்பொருளின் அம்சமாகிய ஆன்மா எப்போதும் உள்ளதேயாகும்.

மனித வாழ்வின் உயர்வற உயர்ந்த இலக்ஷியந்தான் யாது? மனிதனுக்கு உயர்ந்த இலக்ஷியமாவது தன்னை அறிதலே, தான் எதனின்றும் பிரிக்கப்படாத நிலையிலுள்ளானோ அப்பரம்பொருளை அறிதலே. மதத்தின் உயர்ந்த குறிக்கோளாவது (இலக்ஷியமாவது) நித்தியமான ஆன்மாவுக்கும் நித்தியமான பரம்பொருளுக்கும் உள்ள நித்தியமான சம்பந்தத்தை உணர்வதே. நமது அறியாமையாலும் ஆசைகளாலும் நாம் நமது மெய்யான இயல்பை மறக்கிறோம். நமக்கு ஆத்மஞானம் பெற இயலுமாயின் நாம் ஆசையற்றவராகி மெய்யுணர்வு பெற்று முத்தராவோம். திரும்பத் திரும்பப் புத்தர் "மனிதனது துயரங்கட்கெல்லாம் காரணம் அவனுடைய ஆசைகளே" என்று கூறியுள்ளார்.

மனமே பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் காரணமாகிறது. இதுவே உபநிடதங்களின் முக்கிய போதனையாகும். இந்திரியப் பொருள்களிடத்துப் பற்றுள்ள மனம் பந்தத்தை உண்டாக்குகிறது. பற்றுதலினின்றும் நீங்கியுள்ள மனம் ஆன்மாவிற்கு விடுதலையை அளிக்கின்றது. பற்றற்ற தன்மையைப்பற்றிய அற்புதம் யாதொன்றும் இல்லை. நாம் ஒழுங்காகப் பயிற்சி செய்யத் தொடங்கியதும், அது தானாக வரும்.

முற்காலத்தில் இயற்றியதன் பயனாக வந்தவற்றிற் பெரும் பகுதியை இக்காலம் அழித்து விடலாகும். இந்துக்கள் கூறும் கரும நியதியென்பது இங்கேதான் நுழைகின்றது; இதுதான் காரண காரிய முறைமை எனப்படுவது, தெய்விக நீதியென்னும் சட்டமும் இதுவே. கருமம் என்பதற்குப் பொருள் விதியென்பதன்று. சென்ற காலத்தின் பயன் தற்காலமாயின் அம்மாதிரியே வருங்காலம் தற்காலத்தின் விளைவாகும். விதைப்பதற்குத் தக்கவாறு அறுவடை செய்கிறோம். நன்மைக்காகப் பாடுபட நாமாக முயற்சிக்கும் திறமையை இதனாற் பெறுகிறோம்.

"ஒரு நினைவை விதை, ஒரு செயலை அறுவடை செய்வாய்; ஒரு செயலை விதை, ஒரு பழக்கத்தை அறுவடை செய்வாய்; பழக்கத்தை விதை, ஒழுக்கத்தை அறுவடை செய்வாய்; ஒழுக்கத்தை விதை, நீ விதியை அறுவடை செய்வாய்."

சுய முயற்சியாலே விதியை யாம் படைக்கிறோம். சுய முயற்சியாலே விதியை யாம் மாற்றவும் கூடும். ஓரளவிற்கு நாம் செய்ததின் பயனை அழிக்கக்கூடும் என்பதும் உண்மையே. பகவத் கீதையிலே ஸ்ரீ கிருஷ்ண பகவான் மற்ற எல்லா இந்துமத குரவர்களையும் போன்று சுயமுயற்சியைப் பெரிதும் வற்புறுத்துகின்றார். புத்தர் தமது சீடர்கட்குப் பின்வருமாறு கூறுகிறார்: 'உங்கட்கு நீங்களே தீபங்களாகுங்கள்'. புத்தர் கடவுளிடத்து நம்பிக்கையில்லாதவர்; அவர் போதித்ததாவது: "வெளியிலிருந்து வரும் உதவியைச் சார்ந்திராதே. உங்களையே நம்பியிருங்கள். நீங்கள் உங்களையே சார்ந்திருக்கும் அளவு அதிகமாவதற்குத் தகுந்தவாறு உங்களுடைய உள்ளடங்கிய சக்திகளும் அதிகமாக உணரப்படுவனவாகும்."

கிறிஸ்து நாதரது போதனையும் இதனின்றும் வேறுபட்டதன்று; அவர் கூறுவதாவது: "பரமண்டலத்திலுள்ள உங்களது தந்தை பூரணராவது போன்று நீங்களும் பூரணராகுங்கள்". இதன் பொருளாவது, மனிதன் பூரணத்தன்மையை அடையத் தன்னால் இயன்ற அளவு பாடுபடல் வேண்டும் என்பதே. "உங்களது நேர்மை, சாதாரண வைதிகர்கள் பண்டிதர்கள் என்போரின் நேர்மையினும் மிஞ்சியிருந்தாலன்றி, நீங்கள் ஒருக்காலும் பகவானது பரமண்டலத்தை அடையமாட்டீர்கள்..............கேளுங்கள், காண்பது நிச்சயம்; தட்டுங்கள், உங்கட்குக் கதவு திறக்கப்படும்; ஏனெனில் தேடுவோன் எவனும் காண்பது உறுதி"

நாம் விதிக்கு அடிமையா எனும் கேள்விக்குரிய மறுமொழியைக் காண நாம் தொடங்குகின்றோமல்லவா? முன்பு செய்துள்ளதை நாம் ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும்; ஆனாலும் அதே சமயம் முன்பு செய்ததின் பயனைத் தடுத்தற் பொருட்டுப் புதிய முயற்சியைத் தொடங்க முடியும். வெகுதூரத்திற்கு நாம் நமது விதியை மாற்றிக் கொள்ளக் கூடும்.

ஆனால் இதில் வேறொரு கேள்வியும் எழுகின்றது: சுயமுயற்சியே எல்லாம் ஆகுமா? ஞான வாழ்க்கையில் அருளுக்கு இடம் யாது? இந்துமத ஞான குருக்கள் இதுபற்றி

மிகத்தெளிவான கருத்துக்களை யுடையவர். பெரிய அத்வைதவாதியான ஸ்ரீ சங்கரர் பின் வருமாறு போதித்தார்: இறைவனது பேரருளாலேதான் முத்தியிச்சையொடு கூடிய மனிதர்களாகவும், பெருமை வாய்ந்த ஞான போதனைகளை முன்னோரிடமிருந்து பெற்றவர்களாகவும் பிறந்துள்ளோம். முக்தியடையவும் இறைவனை அறியவும் கொள்ளும் இச்சை இறைவனது அருளாலே உண்டாவது.

அருளைப் பெறுவது சுயமுயற்சியாலுந் தான். தமது காமக்குரோதாதிகளும் சமய சந்தர்ப்பங்களின் வலிமையும் தம்மை அடித்துக்கொண்டு போதற்கு இடங்கொடுப்பார் பலராக, உறுதியும் வலிமையும் வாய்ந்தவர் பலர் தமது ஞான வாழ்விலே அசாதாரணமான வெற்றி பெறுகின்றனர் அல்லவா? முயற்சியின் சக்தியான இதுவே தெய்வ அருளுக்கு அறிகுறியாம். எவ்வித ஞான சாதனம் பழகினும், அதனைப்பற்றற்றநிலையில் நின்றும், ஜீவான்மா பரமான்மாவின் அம்சமாதலின், பரமான்மாவுக்குத் தன்னை முழுதும் அர்ப்பணம் செய்யும் நிலையில் நின்றும் புரிதல் வேண்டும் என்னும் கருத்து ஞான வாழ்க்கையில் அடங்கிய ஓர் அடிப்படைக் கருத்தேயாகும். இதுவே ஸ்ரீ கிருஷ்ண பகவானால் பகவத் கீதையில் வற்புறுத்தப் படுகிறது: நம்மையெல்லாம் இயன்ற மட்டும் முயன்று வரும்படி அவர் கூறுகிறார்; ஆனால் அம்முயற்சியை நாம் அகங்காரத்தோடு செய்யாதிருக்குமாறு வேண்டுகிறார்; நமது செயலையெல்லாம் பரம்பொருளிடம் சமர்ப்பித்து, மனத்தை நமக்குள்ளிருக்கும் ஆத்மனிடம் நிறுத்தி, எல்லா ஆசையையும் சுய நலத்தையும் விடுத்து வாழ்க்கைப் போரை அச்சமின்றியும் மனப்பதற்றமின்றியும் புரிய வேண்டும் என்று போதிக்கிறார்.

பதஞ்சலியின் யோக முறையிலும் அதே கருத்தை யாம் காண்கிறோம்: சுய முயற்சி, ஞான சாதனப் பழக்கம், சரணாகதி இம் மூன்றும் வேண்டும்—அதாவது, நமது பகைவனை சரியான முறைகள் எல்லாவற்றாலும் எதிர்த்துப் போர்புரிதலும், எப்போதும் ஈசுவரார்ப்பணமும். நாம் அனைவரும் அண்டமெலாம் பரந்த பரம்பொருளின் பெருங்கதிரில் விளங்கும் சிறுசிறு தூள்களே, இறைவனின் சக்தி பெருகுதற்கேற்ற மடைகளேயாவோம்.

நாம் முயலும் அளவிற்கு ஏற்றவாறு, கண்டப் பொருளுக்கும் (ஜீவான்மாவுக்கும்) அகண்டப் பொருளுக்கும் இடையேயுள்ள தடை நீக்கப்படுகிறது. மனிதனிடத்து ஏற்படும் பரிணாம முறையை நீர்பாய்ச்சும் முறைக்கு ஒப்பிடலாகும். குடியானவன் தன் வயலில் நீர்வரும் வழியிலுள்ள தடைகளை நீக்கிவிடுகிறான், அதனால் நீர் தனது இயல்பாலே தானே ஓடுகின்றது. சுவாமி பிரேமானந்தர், நடக்க முயலும் ஒரு கன்றுக்குட்டியை உதாரணமாக எடுத்துக்காட்டுவது வழக்கம். முதலில் அதன் கால்கள் பலவீனமாயும் தள்ளாடுவனவாயும் இருப்பதனால், அது விழுந்து கொண்டேயிருக்கிறது; ஆனால் கடைசியாக அது நடக்கக் கற்றுக்கொள்வதில் வெற்றி பெறுகிறது; காரணம், அதுவே அதன் இயல்பாதலே, இங்கும் யாது நடைபெறுகிறது? முயற்சியால் தடைகள் நீங்குகின்றன; அப்போது அகண்ட பரம்பொருளினின்றும் மேலும் மேலும் சக்தி பெருகி, நம் உள்ளங்களிலும் ஆன்மாக்களிலும் பாய்கின்றது. நமது ஞான முயற்சியால் ஆன்மாவுக்கும் பரமான்மாவுக்கும் நடுவேயுள்ள தடைகள் உடைந்து அழிகின்றன.

முதலில் முத்தியடைய வேண்டும் எனும் துடிப்பு ஏற்படுகிறது. பரம்பொருளுக்கு இசைந்து ஒழுகும் அவா எரிகின்றது. டால்ஸ்டாய் என்னும் பெரியாரது வாழ்க்கையில், அவர்க்கு நிகழ்ந்த ஒரு கடுஞ்சோதனைக் காலத்தைப்பற்றி யாம் வாசிக்கிறோம். தமது வாழ்விற்கு அதுவரை ஆதாரமாயிருந்த யாதோ ஒன்று தம்முள் முறிந்துவிட்டதாக அவர் அப்போது உணரலானார். தமக்குப் பிடிப்பதற்கு யாதொன்றும் இல்லாதது போலத் திடீரெனத் தோன்றிற்று; ஒழுக்கம் சம்பந்தப்பட்டவரை அவரது வாழ்வு நின்று போய் விட்டதாக அவர் உணர்ந்தார். அதுமுதல் ஓராண்டு காலம் வரை அவர் தமது வாழ்விற்கு முடிவு தேடிவிடலாமா என்று தம்மைத் தாமே வினவிக் கொண்டிருந்தார். பல வழிகளைப்பற்றி நினைக்கலானார் — தூக்குப் போட்டுக் கொள்வதா? அன்றிச் சுட்டுக் கொள்வதா?— ஆனால் அதேசமயம் அக் காலம் முழுதும் ஒரு துடிப்பு (பேரவா) அவரது உள்ளத்தைக் குடைந்து கொண்டிருந்தது; அது இறைவனைக் காணும் பேரவாவே என்றார். அவரது சுயசரிதையில் பின்வருமாறு எழுதுகிறார்: "திடீரென எனக்கு உள்ளிருந்து ஒரு குரல் கேட்டது; அது 'இறைவன் இங்கே அகத்தே உள்ளான்; அவனன்றி ஒருவனும் வாழமுடியாது. இறைவனை ஒப்புக்கொள்வதும், வாழ்வதும் ஒன்றேயாம். வாழ்வு எதுவோ அதுவே பகவான். பகவானை ஒப்புக் கொண்டு வாழ்க' என்றது."

பின்னும் தொடர்ந்து அவர் எழுதுவதாவது: ''இதன்பின் காரியங்கள் எல்லாம் எனக்கே தெளிவாக விளங்கலாயின; அந்த ஒளி முழுவதும் ஒருக்காலும் அணையவேயில்லை. எப்போது எவ்வாறு இந்த மாறுதல் நிகழ்ந்தது என்பதை யான் அறியேன்; ஆனால் வாழ்வுச் சக்தி என்னிடம் எவ்வாறு நாளடைவில், யான் அறியமுடியாத சிறு சிறு அளவிற்குக் குறைந்து வற்றிப்போய், எனது ஒழுக்கத்திற்கு அந்திம தசை வந்ததை யான் உணரலானேனோ, அதேமாதிரி மெல்ல மெல்லச் சிறுகச் சிறுக அவ்வாழ்வுச் சக்தியும் மீளலாயிற்று.''

ஏறக்குறைய அதே காலத்து கவி ரவீந்திர நாததாக்கூரின் தந்தையாகிய தேவேந்திர நாதர்க்கு மிக்க மனத்தளர்ச்சியும் உலகத்தின் மீது அருவருப்பும் தோன்றலாயின. ஒருநாள் ஒரு வடமொழிப் புத்தகத்தின் ஒரு தாள் அவர்க்கருகே பறந்து கொண்டிருந்தது. அவர் அதைப் பொறுக்கிப் பார்க்க, உபநிடதங்களில் ஒன்றிலிருந்து கிழிந்து கிடந்த ஒரு தாளாக அது அமைந்ததைக் கண்டார். அதிற்கண்ட வாக்கியங்களாவன; 'இவ்வுலகமுழுவதும் பரம்பொருளால் வியாபிக்கப்பட்டுள்ளது. உலக இன்பங்களின் மீதுள்ள ஆசைகளைத் துறந்து அவரைப் பெறுக,அவரிடத்திலேயே மகிழ்ச்சியடைக'.

மிகப் பெரும் மாறுதல் அவரிடத்து உண்டாயிற்று, அவரது துயரம் திடீரென உடனே அவரிடமிருந்து மறைந்தது. அவரது சுய சரிதையில் நாம் காண்பது இது; ''எனது புதிய ஆனந்தத்தின் காரணத்தை யான் அறிந்ததும், பர உலக ஆனந்தம் என்மீது பொழியலாயிற்று. மனிதர் என்மீது அனுதாபங் காட்டவேண்டும் என்னும் ஆவலுடையவனாயிருந்தேன்; இப்போது என் நெஞ்சிற்குள்ளே அந்தரங்கமாகப் பேசுவதற்காக தெய்விகக் குரலொன்று பர உலகினின்றும் கீழிறங்கியது: அதனால் எனது அவா நிறைவேறிற்று. மனிதர் அம்மாதிரி ஏற்றதைச் செய்யும் திறமையுடையவராவாரா? இறைவனது கருணையே என் உள்ளத்திற்கு இறங்கியது; இறைவனிடத்து எனக்குள்ள நம்பிக்கை ஆழ்ந்து வேரூன்றியது; உலக இன்பத்திற்குப் பதிலாக அது முதல் யான் தெய்விக ஆனந்தத்தை உணரலானேன்.''

இனி ஸ்ரீராமகிருஷ்ணரைக் கருதுவோம், அவரும் வருத்தமடைந்தார்; ஆனால் கடவுளை மறந்து வாழ்ந்ததற்காகப் பச்சாத்தாபம் (நடந்ததிற்காக வருந்துதல்) உடையவராய் வருந்திய வருத்தமன்று அது, யாதேனும் ஓர் அரும்பொருளை இழந்ததால் விளையும் துயரமுமன்று. அவரது உள்ளத்தைக் குடைந்த துயரமாவது, தாம் வழிபட்டு வந்த தேவியை—பரம்பொருளை—இன்னும் உணரவில்லையே என்பதை அவர் உணர்ந்திருந்ததே. மேலெழுந்த வாரியாகக் கடவுளிடத்து நம்பிக்கை அவர்க்கு இல்லை. அவர்க்குக் கடவுள் மெய்ப்பொருள். அவர்க்கு வாழ்விலுண்டாய பெருந்துடிப்பு இப்பிரபஞ்சத்திற்குள் எங்கும் பரந்துள்ள பரம்பொருளை உணருவதற்காகவே; அவ்வுணர்வைப் பெறும்வரை அவரது ஆன்மாவிற்குச் சாந்தி உண்டாகவில்லை. அவர்க்கும் தம் உயிரை மாய்த்துக்கொள்ளும் எண்ணம் எழுந்தது. தியானத்திலும் வழிபாட்டிலும் நாள்களும் மாதங்களும் கழியலாயின; இறுதியில் வெளி உலகமே மறைந்தது. கதவுகளும், சாளரங்களும், கோயிலுமே யாவும் மறைவதாகத் தோன்றிற்று, அவர் உண்மையான வாழ்வெனும் கடலைக்கண்டார்; அவர் அகண்டமான மெய்ப்பொருட் கடலினிடை அமிழ்ந்திருந்ததையும், உரைக்க முடியாத திவ்விய ஆனந்தம் பெற்றதையும் உணரலானார், ஜெகன் மாதாவாகிய தேவியின் மெய்யான இருப்பை அவர் உணர்ந்தார், அதே அமயம் ஆனந்தக் கடலிடை மூழ்கினார்.

தட்டுங்கள், உங்கட்குத் திறக்கப்படும். கதவு மூடப்பட்டுள்ளது; ஆனால் மெய்ஞ்ஞான அனுபூதியால் நமது முழு இயல்பிலும் விதியிலும் ஒரு பெரும் மாறுதல் உண்டாகும். அவ் அனுபூதியைப் பெறுதற்கு நமது நெஞ்சினுள்ளே ஓர் ஆழ்ந்த துடிப்பு நமக்கு வேண்டும்; அதோடு ஞான சாதனம் பழகவும், நமது கடமைகள் அனைத்தையும் பற்றற்ற நிலையிலிருந்தும் பகவானுக்கு வாழ்வை அர்ப்பணம் பண்ணும் நிலையிலிருந்தும் இயற்றவும் நாம் தயாராயிருத்தல் அவசியம். இம் முயற்சியோடு, நாம் எம் முழுப் பொருளின் அம்சமாவோமோ, அந்த அகண்ட பரம்பொருளுக்கு நம்மை முழுவதும் ஒப்படைக்கும் இரகசியத்தையும் கற்றுக் கொள்ளல் வேண்டும். அருளைப் பெறும் ஆசையால் துடிப்பவனுக்கு அது கிட்டும்.

எமது மாகுரவர் சுவாமி பிரம்மானந்தர் பின்வருமாறு கூறுவதுண்டு; ''அருட்காற்று எப்போதும் வீசிக் கொண்டேயுள்ளது. உமது கப்பற் பாய்களை விரித்துவையும்.'' ஞானசாதனம் பழகுவதால் பாய்களை விரிக்கத் துணை பெறுகிறோம்; அப்போது தெய்வ அருளும் சக்தியும் நம்மீது வீசுகின்றன.

இம் மனிதப்பிறவி எவ்வளவு மங்களம் வாய்ந்தது! அதன் வாயிலாக மனிதன் இறைவனைக் காணக்கூடும். இறைவனை உணர்தலே வாழ்க்கையில் மனிதனது முக்கிய நோக்கமாதல் வேண்டும். அவனை அடைதற்காக நாம் கடுமையாக முயற்சி செய்வோம், அவ்வாறு முத்தியடைவோம். ஆன்மாவான நிலையில் நாம் விதியினும் அதிக வலிமையுடையவரே என்பது உறுதி.

செய்தி

பம்பாயிற் கட்டடத்திறப்பு விழா

இவ்வாண்டு மார்ச்சு 4-ம் தேதியன்று நமது இந்தியக் குடியரசு நாட்டுப் பிரதமர், புகழ்மிக்க ஸ்ரீமான் பண்டித ஜவஹர்லால் நேரு என்பார் பம்பாய் ஸ்ரீராமகிருஷ்ண ஆசிரமத்தாராற் புதிதாகக் கட்டப்பட்ட மாடமாளிகை யொன்றைத் திறந்து வைத்தார். அதிலே மாணவரில்லமும், விவேகாநந்த மண்டபமும், சிவானந்த நூல்நிலையமும், தரும வைத்திய சாலையும் அடங்கியிருந்தன. பிரதமர் அவர்கள் திறப்புவிழாப் பேச்சில் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் தொண்டுகளைப் பற்றிப் பொதுவாகப் புகழ்ந்துரைத்தார். இவ்விழாவைச் சிறப்பித்தற்காகப் பேலூர்த் தலை மடத்திலிருந்து பல வயதான துறவிகள் பம்பாய்க்கு விஜயம் செய்தனர். அதே ஆசிரம சம்பந்தமான ஒரு பொதுக்கூட்டத்தில், பம்பாய் முதல் மந்திரியார் கௌரவ ஸ்ரீ கெர் என்பவரது தலைமையின் கீழ் ஸ்ரீமத் மாதவாநந்த சுவாமிகள் மார்ச்சு 10-ம் தேதியன்று சலவைக் கல்லாற் செய்த சுவாமி விவேகாநந்தர் உருவச் சிலையைத் திறந்துவைத்தனர்.

மயிலை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் பிறந்த நாள் விழா

திருமயிலை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் 116-வது பிறந்தநாள் விழா இவ்வாண்டு மார்ச்சு மாதம் 9-ம் தேதி வெள்ளிக்கிழமை காலையில் பஜனை பூஜை ஹோமம் பிரசாத விநியோகம் முதலியவற்றோடு வழக்கம்போற் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பொதுக் கூட்டம் அடுத்த 11-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மாலை 2-30 மணிக்கு நாமதேவர் சரித்திரத்தைப்பற்றிய ஹரிகதா காலக்ஷேபம் தொடங்கி இரண்டுமணி நேரம் நடந்தது; அது அன்பர்கட்குப் பக்தியை ஊட்டும் விருந்தாயிற்று. சென்னை மடத்தில் முன்பு தலைவராயிருந்தவரும், பின்பு ஐரோப்பா அமெரிக்க நாடுகளில் வேதாந்தப் பிரசாரத்தில் பல ஆண்டுகள் ஈடுபட்டிருந்தவருமான ஸ்ரீமத் யதீஸ்வராநந்த சுவாமிகள் தலைமை வகிக்க, சொற்பொழிவுகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் தெலுங்கிலும் அறிஞர் ஆற்றி, குருதேவரது வாழ்க்கையையும் அவரது உபதேசத்தையும் பற்றி விரிவாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஸ்ரீ துரைரெங்கசாமி பிள்ளை யவர்கள் தமிழில் ஆற்றிய சொற்பொழிவில், இராமர், கிருஷ்ணர் இருவரது அம்சமாக ஸ்ரீராமகிருஷ்ணர் அமைந்ததையும், அவரது உபதேச மொழியின் சிறப்பையும் வற்புறுத்தினர். தெலுங்கு பாஷா சமிதியைச் சார்ந்த ஸ்ரீ வெங்கடராவ் என்பார், அணுச்சக்தியைப் பிரயோகிக்கும் இக்காலத்திற்கு ஸ்ரீராமகிருஷ்ணரது ஞானோபதேசம் பயன் படுமாற்றைத் தெலுங்கு மொழியில் எடுத்துக் காட்டினர். ஆங்கிலத்திற் பேசிய ஸ்ரீ ராகவ சாஸ்திரியார் பாகவதத்தில் கூறப்படும் ஞான அனுபூதிக்கு ஸ்ரீராமகிருஷ்ணர் இலக்கியமாய் மிளிர்வதை விளக்கினர். ஸ்ரீமத் சுவாமி யதீஸ்வராநந்தர் தமது தலைமையுரையில் ஸ்ரீராமகிருஷ்ணரது உலகப் பொதுவான அனுபூதியையும், அவரது அடிச் சுவடைப் பின்பற்றிவாழும் நம்மனோரது பொறுப்பையும், அனுபவ வேதாந்தத்தை வாழ்க்கையிற் பின்பற்றும் அவசியத்தையும் பற்றி விரிவாகக் கூறினர். ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றிய கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவ மாணவிகட்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. நன்றியுரையோடு கூட்டம் இனிதாக நிறைவேறிற்று.

கமார்ப்புகூரில் ஸ்ரீ ராமகிருஷ்ணரது கோயில்

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரது திருக்கோயில் அவரது அவதாரத் தலமாகிய கமார்ப்புகூரிலே கட்டப்பட்டுள்ளது,

அதன் திறப்புவிழா 1951 மே பதினொன்றாந் தேதி நிகழும். ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் சுவாமி சாரதேசுவரானந்தர் (ஹூக்ளி ஜில்லா, கமார்புகூர் தபாலாபீஸ்) விழாச் சம்பந்தமான காரியங்களைக் கவனித்து வருகிறார்.

மதிப்புரை

1. அறவாழ்வு (கதைத் தொத்து)

மொழிபெயர்ப்பு ஆசிரியர் T. R. இராமநாத சாஸ்திரியார். B.O.L. பக்கம்: 152. விலை ரூ 1—8—0. கிடைக்குமிடம்: மானேஜர், சுவாமி விவேகாநந்த சபை, தாராபுரம், கோயம்புத்தூர் ஜில்லா.

இந்நூலிலுள்ள கதைகள் அறவாழ்வின் அவசியத்தையும் இயல்பையும் பற்பல உதாரணங்களால் நன்கு விளக்குகின்றன. எளிய நடையில் இனிய முறையில் மனதிற்கு இன்பத்தையும், அறவாழ்வில் ஆசையையும் ஊட்டுவதற்கு ஏற்றவாறு கதைகள் அமைந்துள்ளன. தன்னலத் தியாகமும் மன்னுயிர்ப் பணியும் ஆகிய இரண்டும் நமது தேசத்திற்குச் சிறப்பாக உரிய இரு இலக்ஷியங்களாவன. அவற்றை உள்ளத்துப் புகட்டும் இந்நூல் சிறுவராலும் பெரியோராலும் வாசிக்கவும் பின்பற்றவும் தகுந்ததாகும். நல்ல தாளில் சிறந்த முறையில் அச்சிடப்பட்டுள்ளது.

2. ஸ்ரீமத் பகவத்கீதை

(தமிழ் மொழி பெயர்ப்பு)

ஆசிரியர்: சுவாமி சித்பவாநந்தர். பக்கம்—196. விலை ரூ 1—12—0. கிடைக்கும் இடம்: ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை P.O. திருச்சி.

நாகர எழுத்தில் மூலமும் தமிழில் பொழிப்புரையும் அடங்கியது இந்நூல். பொழிப்புரை இனிய தமிழ் நடையில் மூலத்தையொட்டித் தெளிவாயும் சுருக்கமாயும், பொருத்தமாகவும் அழுத்தமாகவும் அமைந்திருத்தல் மெச்சத்தக்கது. நல்ல வெண்மையான தாளில் சிறந்த முறையில் அச்சிடப்பட்டுள்ளது.

"நாம் அன்பைப் பெறுவோமாக, பெருக்குவோமாக. எல்லா எதிர்ப்பையும் இளக்கும் அன்பு; எல்லாப் பகைவரையும் வெல்லும் அன்பு; எல்லா இடையூறுகளையும் அடித்துக் கொண்டு போகும் அன்பு; ஈதல், பெருந்தன்மை, சகிப்பு நன்முயற்சி — இவற்றை ஏராளமாகத் தரும் அன்பு; எல்லாத் தடைகளையும் வெல்லும் அன்பு; எல்லையற்ற, எதிர்ப்பற்ற, எதனையும் தன்னுள் மூழ்கச் செய்யும் அன்பு....ஒவ்வொருவரும் அன்புக் கடலாகவும், அன்பு நக்ஷத்திரமாகவும், அன்புத் துறைமுகமாகவும், அன்பு முத்தாகவும், அன்பு அரண்மனையாகவும், அன்பு மலையாகவும், அன்புப் பிரபஞ்சமாகவும் இருக்கவேண்டும். உன்னிடம் அன்பு உள்ளதா? அப்போது உன் வலிமையை எவரும் எதிர்க்கவொண்ணாது. உன்னிடம் அனுதாபம் உள்ளதா? அப்போது உன் புகழை நக்ஷத்திரங்கள் யாவும் பாடும்."

— அப்துல் பாஹா